Regd. No. M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 20-11-1948 சனிக்கிழமை } மலர் 11.

## ஒன்று கூடுவோம்.

★

1. தமிழ்நாட்டில் இந்திவந்து புகுந்துவிட்டதாம்
தரணியிலே தமிழுக்குக் கேடுவந்ததாம்
என்றுஇந்த சூழ்ச்சிறெல்லாம் ஒழியப்போறதோ
எப்போநமக்கு திராவிடநாடு கிடைக்கப்போறதோ

2. பகல்வேட்டைக் காரர் பாடுஇன்பமாம்
பாட்டாளிமக்களுக்குப் பற்பல துன்பமாம்
"தமிழ்மொழியே சரியா தெரியல்லே"ங்கறான்
தன்பிள்ளைகளை இந்திபடிக்க வேண்டாமுங்கிறான்

3. போனதடவை இந்திநுழைத்துப் புண்ணியமில்லே
பொறந்தநாட்டில் இந்திநுழைப்பது கண்ணியமில்லே
ஆட்சியாளர் கூறிவிட்டால் எல்லாம்நடக்குமோ
அவினாசியார் சொன்னபடி அதுவும்நடக்குமோ

4. இந்திஎதிர்ப்பு மறியல்கள் எங்கும்நடக்குது
ஈனஇந்தியை ஒழிப்பதற்குத் துணிச்சல்தோணுது
மக்களைப்பார்த்து அவினாசி மருட்சிகொள்றாரு
மானத்தைக்காப்பாத்த கைது பண்ணச்சொல்றாரு

5. தங்குதடையில்லாமே ஆட்சி சரியாநடக்கணும்
தறுதலைகள் பேச்சைக் கேட்காமேயிருக்கணும்
பெட்புடைய மாந்தர்கள் வாழ்வினைப்போல்
பெருமையுடன் வாழ நமக்குவகையும்செய்யணும்.

6. தமிழ்நாடு செழிக்க நல்லதிட்டம்போடணும்
தரணியில் சிறந்த நாடெனப்புகழ்பெறவேணும்
கொஞ்சநேரம்கூட சும்மா குந்தியிராமல்
கொல்புலிபோல் தமிழ்காக்க ஒன்றுகூடணும்.

—கி. இராவணன்.

# மூன்றடி மண்

நாவன்னாக்கினா

வெகு வெகு காலத்திற்கு முன்னால் திராவிட நாட்டை 'மாபலி' என்ற மன்னன் ஆண்டு வந்தான். 'மக்களுக்காகவே மன்னவன்' என்ற உயர்ந்த தத்துவத்தை அந்தக்காலத்திலேயே அவன் கடைப்பிடித்து வந்தான். அவன் தன் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது கேட்டவருக்கு, கேட்டதை இல்லை என்று சொல்லாமல் கொடுத்து வந்தான். அவனது கீர்த்தி எங்கும் பரவியது. மாபலி கொடைத்திறனை மெச்சி எல்லோரும் கொண்டாடினார்கள்.

அந்தக்காலத்திலேதான் ஆரியர்கள் கூட்டம், கூட்டமாக திராவிட நாட்டில் நுழைந்து கொண்டிருந்தனர். மாபலி மன்னனின் சிறப்பையும், கொடைத்திறனையும் கேள்விப்பட்ட ஆரியர்கள் 'அங்கே சென்றால் சுகமாகவாழலாம்' என்று மாபலியின் நாட்டையடைந்தனர். மாபலியும் அவர்களை அன்புடன் வரவேற்று, வாழவும் இடம் கொடுத்தான்.

அவர்கள் வந்த சிறிது காலத்திற்குள், மதமென்ற பெயரால், மிருக பலியும், நரபலியும் பெருகி, சாக்கடைச் சாத்திரங்களால் மக்களை மடையர்களாகச் செய்து கொண்டிருந்தனர். எங்கு பார்த்தாலும், ஓமப்புகையும், 'மந்திரம்' என்ற பெயரால் புரியாத பாஷையில் 'முணு முணுப்பதையும்கண்டான் மாபலி. மதத்தினால் மக்கள் 'சாக்கடை மக்கள்' ஆக ஆகிக்கொண்டிருந்தனர். உழைக்காமல், உழைக்கும் மக்களின் உழைப்பை ஏமாற்றித் தின்னும் ஆரியர்களைக் கண்டதும் மாபலி மன்னனுக்கு ஆத்திரம் வந்து விட்டது.

"மத சம்மந்தமான எந்தக் காரியமும் இந்த நாட்டில் நடக்கக் கூடாது" என்று தடையுத்தரவு போட்டான்.

மத சம்மந்தமானகாரியங்களைச் செய்யாவிட்டால் ஆரியர்கள் வேலையல்லவா செய்யப்போக வேண்டும்? ஆரியர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்யச் சம்மதிப்பார்களா? மாபலியின் தடையுத்தரவை மீறி மத சம்மந்தமான காரியங்களைச் செய்து வந்தார்கள்.

மாபலி முதலில் இலேசான தண்டனைகள் கொடுத்துப் பார்த்தான். ஆரியர்கள் தம் மதத்தை விடுவதாக இல்லை. "எங்கெங்கே மத சம்மந்தமான காரியங்கள் நடைபெறுகிறதோ, அங்கேயெல்லாம்சென்று, அந்தக்காரியங்களையெல்லாம் அழித்து, ஆரியர்களைப் பிடித்து வாருங்கள்" என்று மாபலி தம் வீரர்களுக்கு உத்தரவிட்டான்.

அவ்வளவு தான், ஆரியர்களின் மத சம்மந்தமான காரியங்கள் எல்லாம் சின்னா, பின்னமாக அழிந்தது. ஆரியர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஆரியர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கூட்டம் போட்டார்கள். அந்தக் கூட்டத்தில் "இந்த மாபலி இருக்கும் வரை நாம் முன்னேற முடியாது. ஆகையால் இவனை ஒழித்துவிட வேண்டும். இவனோ பெரிய மன்னவன். இவனைத் தந்திரத்தினால்தான் ஒழிக்க வேண்டும். நம்மில் யாரையாவது 'இவர் தான் கடவுள் அவதாரம் எடுத்திருக்கிறார்' என்று புரளி செய்து ஊர் மக்களை நம்பச்செய்யவேண்டும்; பிறகு அவனையே விட்டு மாபலியை ஒழிக்கக்கட்டவேண்டும்" என்று தீர்மானம் செய்தார்கள்.

அதன்படி 'வாமனன்' என்பவனை "இவர்தான் கடவுள்; அவதாரம் எடுத்திருக்கிறார்" என்று புரளி செய்துகொண்டிருந்தார்கள். மாபலி மன்னன் பிறந்த நாள் கொண்டாட்டம் வந்தது. எல்லோரும் மாபலியிடம் சென்று, தமக்குத் தமக்கு வேண்டியதைக் கேட்டுப் பெற்றுச் சென்றனர். ஆரியர்கள் வாமனனை 'மூன்றடி மண்' கேட்டு வருமாறு அனுப்பினார்கள். வாமனன் "மூன்றடி மண் வேண்டும்" என்றதும் மாபலிக்கு ஆச்சரியமாகவிருந்தது. இருந்தாலும் கொடுத்தாக வேண்டுமல்லவா? ஆகவே, "மூன்றடி மண் வேண்டும் போது பெற்றுக்கொள்ளும்" என்று மாபலி, வாமனனை அனுப்பினான்.

ஒரு நாள், வாமனன் மாபலியிடம் சென்று "மூன்றடி மண்ணைக் கொடும்" என்று கேட்டான். "எந்த இடத்தில் வேண்டும்"? என்றான் மாபலி. "மூன்றடி மண் என்றால் என்னவென்று தெரியுமா"? என்று கேட்டான் வாமனன். "என்ன?" என்றான் மாபலி. "நாங்கள் எங்கும் பரவி வியாபித்து இருக்கிறோம்; எங்களுக்கு உங்களைப்போல் மூன்றடி என்பது மூன்றடியல்ல; ஒரு நாடு தான் ஒரு அடி. ஆகவே, உமது நாட்டை ஒரு அடியாக அளந்து கொண்டோம். இரண்டாவது அடியை அளக்க இடமில்லை; ஆகவே நீ இரண்டது அடி மண்ணுக்காக உமது சொத்து, சுகமெல்லாம் துறந்துவிட வேண்டும். மூன்றாவது அடியை அளக்க அறவே இடம் கிடையாது. உமக்காக மூன்றாவது அடியை விட்டுக் கொடுக்கலாம்; அது உமது கொடைத் திறனுக்கு இழுக்காக முடியும்; ஆகவே, என்னுடன் நான் குறிப்பிடும் இடத்திற்கு வந்தால், என் காலால் உமது தலையை அளந்து பாதாள சொர்க்கத்திற்கு அனுப்பி வைக்கிறோம்" என்றான்.

இதைக் கேட்ட மாபலியின் குரு சுக்கிராச்சாரியார் "இதில் ஏதோ சூது இருக்கிறது; கொடுக்காதே" என்று எச்சரித்தார். மாபலியோசித்தான். இதில் ஏதோ சூது இருப்பது புலப்பட்டது. என்ன செய்வது? வாக்குக்கொடுத்தாயிற்றே? தாம் இத்தனை காலமும் காத்து வந்த வாக்குச் சுத்தத்தை காற்றில் பறக்கவிட மாபலிக்கு மனமில்லை. வாமனன் கேட்டபடி மூன்றடிமண் கொடுக்கத் தீர்மானித்தான். தன்வாக்குச் சுத்தத்தைக் காப்பாற்ற தம் தாய், தந்தையர்களுக்கு மேலாக மதித்து வந்த தம் குரு சுக்கிராச்சாரியாரையே தட்டி நடந்தான் மாபலி.

'தமக்குப் பின் உள்ள சந்ததியார்களாவது ஆரியர்களின் சூழ்ச்சிகளை வெட்ட வெளிச்சமாக்கி விடுவார்கள், என்று; அன்று நிச்சயம் நம்பியிருப்பான் மாபலி மன்னன்.

"உமது இஷ்டம்போல் இரண்டடி மண்ணுக்காக என் நாட்டையும், என் சொத்து சுகத்தையும் இழந்து விட்டேன். உமது மூன்றாவது அடியை அளந்து கொள்ள

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

ரோஜா முத்தையா நூலக அறக்கட்டளை

[வாழ்த்துப் பாடல்]

யாருக்கும் மிகை ஞானமும்
தன்மானமும் நிறை
திராவிடர் நாமே!
திராவிடர் நாமே!!
திராவிடர் நாமே!!!
சீர் மிகும் குடியரசும் சமமாய்ச்
சேர் உடைமைகள் பொதுவும் ஆக
வீரமும் தீரமும் ஓங்கிடவே
வெற்றியுமே.....பெற்றிடுவோம்....
வாலிப திராவிடர் நாம்!
வாலிப திராவிடர் நாம்!!
வாலிப திராவிடர் நாம்!!!

## காட்சி 1.

[சாலை.]

ஊர்:— சென்னை.

காலம்:— மாலை.

உறுப்பினர்:— இராஜன், விமலா, வேவா, சில வழிப்போக்கர்கள்.

கதை அமைப்பு:— [சென்னைசர்வகலாசாலைமாணாக்கர்களாகிய இராஜன், விமலா, வேவா மூவரும் ஒரு நாள் சந்தித்துப் பேசிக்கொள்கின்றனர்.]

இராஜன்:— [ஒரு செய்தித்தாளைப் படித்துக் கொண்டே செல்லும் கவனத்தில் விமலா மீது மோதியும் அறியாமலே.] 'ஸாரி......!!' (Sorry......!)

விமலா:— [ஒரு செய்தித்தாளைப் படித்துக் கொண்டே வரும் கவனத்தில் இராஜன் மீது மோதியும் அறியாமலே.] 'ஸாரி...!!' (Sorry...!!)

வேவா:— [இராஜன் எதிரில் சென்று] என்னப்பா ராஜா! எங்கே புறப்பட்டு...விட்டாய்...? அடடே....? அங்கே போகிறது விமலா இல்லை...?

இராஜன்:— ஆங்! விமலா!! [உடனே திரும்பி] 'ஹலோ!!! மை டார்லிங் விமலா...'

விமலா:— [உடனே திரும்பி] 'ஹலோ...! மை டியர் ராஜ்!!'

இராஜன்:— விமலா! நீ பரீட்சையில் பெற்ற வெற்றியைக் கண்டேன்! நான் உன்னைப் பாராட்டுகிறேன்!!

விமலா:— ஓ! நிறுத்துங்கள்! நான் தான் உங்கள் வெற்றியை முதலில் கண்டேன்!! நானே உங்களை முதலில் பாராட்டவேண்டும்!!!

இராஜன்:— இல்லை நான் தான்!

விமலா:— இல்லை இல்லை!! நானேதான்; ஏனென்றால், நீங்கள் மட்டும் பரிட்சைக்குரிய அந்த 'நோட்ஸ்'கள் கொடுத்துதவி இருக்காவிட்டால்! நான் பரிட்சையில் இவ்வளவு பெரிய வெற்றி பெற்றிருக்கமுடியுமா? ஆகவே, நான் தான் உங்களை நன்றி அறிதலோடு பாராட்டவேண்டும்!

இராஜன்:— அதெல்லாம் ஒன்றுமில்லை விமலா...

வேவா:— (பொறாமைஇழந்து) இதெல்லாம் இங்கேயேதானா...?

இராஜன்:— அடடே...! நீ வேறே வந்திருக்கிறாயா...?

வேவா:— என்னப்பா ராஜா! நான் வந்தது விமலாவுக்குத்தான் தெரியாது! உனக்குக்கூடவா...?

இராஜன்:— ஓ! நீதானப்பா விமலாவைக் காட்டினாய்? மறந்தே போய்விட்டேன்...கொஞ்சம் மன்னிக்கணும்!

வேவா:— விமலாவைக் கண்டவுடன் இவ்வுலகையே மறந்துவிடுவாயே! என்னை மறந்ததுதானா ஆச்சரியம்? சரி! கல்லூரி வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துவதாக உத்தேசமா? அல்லது, நல்ல முகூர்த்த வேளையில் நீங்கள் இருவரும் இல்லறசாகரத்தில் மூழ்கிவிடப்போகிறீர்களா....?

[இச்சமயம் இராஜனும், விமலாவும் ஒருவரையொருவர் கடைக்கண்ணோடு கண்ணோக்கிக் காதலில், கருத்தழிந்து நிற்கின்றனர்.]

அடடே....! இது நடுத்தெருவப்பா...! (என்று கிண்டல் செய்கிறான் வேவா)

விமலா:— ஆங்! ஆமாமாம்...!! ஊ...ம்!!!—மிஸ்டர் வேவா! நீர் ஒரு சங்கோசப் பேர்வழிபோலிருக்கிறீர்...? எதற்கெடுத்தாலும் நடுத்தெரு, நடுத்தெரு என்று நாணிக்கோணிக் கொள்கிறீரே!! அதோ பாரும்! ஓர் 'ஆங்கிலோ—இண்டியனும்' அவன் காதலியும் கைகோத்துக்கொண்டு உல்லாசமாகச் செல்லும் காட்சியை......!

இராஜன்:— ஏன்! இதோ, நமது 'பிரின்ஸிபாலும்' அவருடைய அன்புள்ள காதலியும் இன்பமயமாகச் செல்லும் காட்சி...!

வேவா:— அடே...அப்பா! உங்களுக்குத்தான் அவ்வுதாரணக் காதலர்களைக் காட்டத் தெரியுமோ? அதோ, அந்தப்பக்கம் பாருங்கள்! ஒரு முஸ்லிமையும், உடல் உறை தரித்துத் தட்டுத் தடுமாறிக்கொண்டு செல்லும் அவருடைய அருமைக் காதலியையும்...!

ஏதோ உலகம் பலவிதம்! என்று சொல்வீர்களா...அதை விட்டு, உதாரணம் காட்ட வந்து விட்டீர்களே! உம். சரிசரி! 'ஸ்டைல்'களை எல்லாம் அப்பால் கவனித்துக்கொள்ளலாம்! காலட்சேபத்திற்கு ஏதாகிலும் வழி கண்டு பிடித்து விட்டாயா ராஜா...?

இராஜன்:- அதுதான் இன்னும் தெரியவில்லை...!

விமலா:- ஏன்! நீங்கள் நடேசா மில்லில் 'ஹெட் கிளார்க்' வேலை பார்க்கப்போவது, உங்களுக்குத் தெரியாதா?

வேவா:- 'மானேஜிங் டைரக்டர்' விஸ்வனுடைய சம்மதம் கிடைத்து விட்டதோ?

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கதை கற்பனை.

சிறுகதை

இரண்டாம் பருவம்

# தாசி.

போட்டி

எண் 10.

என்னை சமூகம் தாசி, வேசி, விலைமகள், கூத்தி, தேவடியாள் என்றெல்லாம் பழித்துப் பேசுகிறது. பேசட்டும்; பரவாயில்லை! ஆனால் ஒன்று! சமூகம் மட்டும் ரொம்ப ஒழுங்கானதோ? நான் வெளிப்படையாய், என் வயிற்றிற்காக—என் வாழ்விற்காக 'இவ்வாழ்க்கை'யை ஒரு தொழிலாகக் கொண்டு நடத்துகிறேன்; சமூகமோ, இரகசியமாய், கணநேர இன்பத்திற்காக—உடலிச்சைக்காக ஆணும் பெண்ணுமாய் தனித்தனியே 'இதே வாழ்க்கையை' ஒரு கடமையாகக் கொண்டு நடத்துகிறது. இவ்வளவுதானே வித்தியாசம்! இதற்காக ஏன் இந்தச் சமூகம் என்னை அவதூறாகத் தூற்றுகிறது? இவ்வளவிற்கும் நானென்ன தாசியாக மாற விரும்பினேனா, விரும்பத்தான் செய்கிறேனா? இல்லவேயில்லை! சமூக அமைப்பும் சூழ் நிலையுமே என்னைத் தாசியாக மாறும்படியான நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கின.

* *

சுந்தரம்! ஆம்; அவன்தான் என் பள்ளித்தோழன். அவனும் நானும் சிறு வயது முதலே ஒன்றாகப் பழகினோம்; படித்தோம். அப்போது நாங்கள் விளையாடிய விளையாட்டுகள்... அவைகளை இப்போது நினைத்துக் கொண்டால்கூட என் உள்ளத்தில் இன்பநீர் ஊற்றெடுத்தோடுகிறது. அதிகம் வளர்த்துவானேன்! பத்தாண்டுகளின் பருவ வளர்ச்சி எங்களை அன்பில் பிணைத்தது. நானும் அவனும் உயிரும் உடலுமானோம். இதற்கிடையே நான் பூப்பெய்தி விட்டேன் என்ற காரணத்தால், சமூகம் எங்களுக்கிடையே கட்டுப்பாடு எனும் வேலி கட்டி எங்களைப் பிரித்து வைத்தது. ஆனாலும் நாங்கள் ஒருவரையொருவர் காண நேர்ந்தபோதெல்லாம் 'கருத்துகள்' பரிமாறிக் கொண்டோம். ஏன், சமயம் கிடைத்தபோதெல்லாம் சந்திக்கவும் செய்தோம். அப்போது எங்களுக்குள் எத்தனை வாக்குறுதிகள்! இன்பக் கனவுகள்!!

காதல் என்பது சுவைக்கச்சுவைக்கத் திகட்டாத தேன்—இது நாங்கள் எண்ணியது. ஆனால் அனுபவமோ—?

இதற்கிடையே உற்றார் உறவினர் என்ற முறையில் சில கிழங்கள் என் மணம் பற்றிய புத்திமதிகள் கூற முன்வந்தனர், என்பெற்றோருக்கு. "காலம் கெட்டுக் கிடக்கிறது. வயது வந்த ஒரு குமரியை இப்படியும் வீட்டில் வைத்திருக்கலாமா? ஊரார் ஒரு மாதிரி பேசுவார்களே" — "நாளுங்கிழமையுமாய் பெண்ணை ஒருவனுக்குப் பிடித்துக் கொடுத்தால்தானே நல்லது!" என்றெல்லாம் கூறி என் பெற்றோரின் மனதைக் கலைத்து விட்டனர். எங்களுக்கு இல்லாத அக்கரை அவர்களுக்கென்ன வந்ததோ! என் பெற்றோரும் அவர்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பவர்கள் போல் எனக்கு ஒரு மணவாளன் தேட ஆரம்பித்தனர். அதன் பலன்—? வாரத்திற்கு ஓரிருவர் விருந்தினராக வந்து போனதுதான். வந்த மாப்பிள்ளை வீட்டாரெல்லாம் "பெண்ணிற்குச் சரியான சொத்தில்லை; நகையுமில்லை" என்றே கூறி என்னைத் தட்டிக் கழித்தனர். இது ஒரு வகையில் எனக்கு மகிழ்ச்சியே. ஆனாலும் ஏதோ ஒரு குறை என் மனதை வாட்டத்தான் செய்தது. இவ்வளவிற்கும் நான் ஒன்றும் குரூபியாக இல்லை. அழகிதான். இருந்தாலும் அழகை யார்தான் முக்கியமாகக் கருதுகின்றனர்? அழகு மணமாகப் போகும்பெண்களுக்கு உபயோகப்படும் வெறும் 'சிபார்சுச் சீட்டு' தானே! செல்வமும் அந்தஸ்தும்தானே உண்மையான யோக்யாம்சங்களாக இருக்கின்றன? இப்படியாக என்னை வந்து பார்த்துப் போகும் விருந்தினரை உபசரிப்பதிலேயே எங்களிடமிருந்த கொஞ்சப் பணமும் செலவழிந்து விட்டது. கடைசியில், ஒரு வேளைச் சாப்பாட்டிற்கே வகையற்று வாடும் நிலைக்கு வந்து விட்டது எங்கள் குடும்பம். ஆதரிப்பார் யாருமில்லை. இந்நிலையில் என்னை எவன் கழுத்திலாவது கட்டி அனுப்பி விட்டால்தான், என்னோடு இளைய மற்ற மூன்று தங்கைகளும் விலை போவார்கள் என்று என் பெற்றோர் கருதினர். எவன் ஒரு ஏழைப் பெண்ணை மணக்க முன்வருவான்? சுந்தரமாவது என்னை சீர்திருத்தக் கலப்புப் பதிவு மணம் செய்துகொண்டிருக்கலாம், எங்கள் பெற்றோர்களின் சம்மதமே இல்லாமற்கூட. ஆனால் அவனுக்குத்தான் இன்னும் ஒரு குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தவோ, பொருள் சம்பாதிக்கவோ திறன் ஏற்படவில்லையே! இந்நிலையில் எங்கள் குடும்பத்திற்கு அபயமளித்து என்னை ஆட்கொள்ள முன்வந்தார் ஒரு வெள்ளி மீசை வாலிபர். அவர் எங்கள் குடும்பம் முழுவதையுமே காப்பாற்றுவதாகஉறுதி கூறினார். என்னை இரண்டாம் தாரமாகத் தான் கேட்கிறார் என்பது தெரிந்தும் என் பெற்றோரும் என்னை அவருக்கு மணம் முடிக்க ஒப்பினர், வறுமையின் காரணமாக. நானோ என் வாழ்க்கையை ஒரு கிழப்புலிக்கு இரையாகக் கொடுப்பதாக எண்ணி யெண்ணி நெஞ்சம் புண்ணானேன். கடைசிவரை "நான் அந்தக் கிழட்டுப் பிணத்தைக் கட்டிக்கொண்டு அழமாட்டேன்" என்று தலையைக் குலுக்கிப்பார்த்தேன். பயன்? நான் அக்கிழவரின் பணத்திற்கு விற்கப்பட்டு அவருடைய மனைவியானேன்.

சமூகம் கன்னியரை வியாபாரப் பொருட்களாகக் கருதுகிறது. ஆனால் அதே கன்னியரே தங்களை வியாபாரப் பொருளாக மதித்து விட்டாலோ, 'அய்யோ, கற்பு போச்சு! பதிவிரதைத்தனம் போச்சு!!' என்று அலறுகிறது. கன்னியர் வியாபாரப் பொருட்களல்ல; சுதந்தர வானில் பறந்து திரியும் சிட்டுகள்! அவைகளுக்கு தங்களுக்கிஷ்டமானவற்றையெல்லாம் செய்து கொள்ள உரிமையுண்டு.

* *

அப்போது 'எங்களுக்கு, நானூறு ஏக்கர் நிலமிருந்தது; மூன்று மாடி பங்களா இருந்தது; ஒரு லட்ச ரூபாய் ரொக்கமிருந்தது; உண்பதற்குப் பாலும் பழமும் உடுப்பதற்குப் பட்டுப் பீதாம்பரமும், அணிவதற்கு பொன்-வைர நகைகளும் இருந்தன. அவைகளுக்கெல்லாம் நான்தான் எஜமானி. ஆம்; உண்மை! அவைகளை நான் மறக்கவில்லை. இவ்வளவு சீரும் சிறப்பும், செல்வமும் சாதனமும் இருந்தும் நீ ஏன் தாசியானாய் என்று கேட்பீர்கள். நியாயம்! இவைகளால் மட்டும் ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கை சுகப்பட்டு விடுமா? ஏன் என்று நீங்கள் கேட்கலாம். கூறுகிறேன் கேளுங்கள்; என்னைத்தொட்டுத் தாலி கட்டியவர் இருக்கிறாரே, அவர் எனக்குத் தாத்தாவாக இருக்கத் தகுதியுடையவர்தான்; கணவராக அல்ல. அவரையும், என்னையும் கணவனும் மனைவியும் என்று யாராவது கூறினால் பார்ப்பவர் சிரிக்கத்தான் செய்வர். அவ்வளவு ஏற்றத் தாழ்வு எங்கள் இருவருக்கும்! அதாவது போகட்டும்! அவர் என்னைத்தான் மணந்துகொண்டாரே, அதனால் அவர் அடைந்த பயன் என்ன? நான்தான் பெற்ற சுகம் என்ன?

வெளியில் பார்ப்பதற்கு தாஜ்மஹால் கட்டிடம் அழகு மிளிர்ந்துதான் காணப்படுகிறது. ஆனால் அதன் அடி

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# சிறை பாசறையாகவேண்டும்!

''கே. வி. கே. சாமி''

☆

சென்னை மாகாணத்தில் ஆகஸ்டு 15-ந்தேதிக்கு முன்னதாகச் சிறைப்பட்டோர் மொத்தம் 21 ஆயிரம் என்றும், அவர்களில் ஆகஸ்டு 15 சுதந்தர தின விழாவை ஒட்டி நான்கு ஆயிரம் கைதிகளை விடுதலை செய்யப்போவதாகவும் ஆட்சி மன்றத்தின் அறிக்கைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. அதன்படியே சுதந்தரதின விழாவின் காரணமாக நான்கு ஆயிரம் கைதிகள் விடுதலையும் செய்யப்பட்டார்கள்.

ஆனால் நான்கு ஆயிரம் கைதிகளை விடுதலை செய்த சுமார் 2½ மாத காலத்திற்குள், மீண்டும் நான்கு ஆயிரம் கைதிகள் அந்த இடத்தைப்பூர்த்தி செய்து, முன்பு உள்ள 21 ஆயிரம் என்ற எண்ணை எட்டிப்பிடித்திருப்பார்கள் என்றே எண்ணுகிறேன்.

கோட்டை கொத்தளங்களை முற்றுகை இட விரைந்து செல்லும் வீரர்களைப்போல, சிறைச்சாலையை நோக்கிப் பாய்ந்து செல்லுவதின் மூலகாரணம், நாட்டிலே ஏற்பட்ட வறுமையும், மக்களிடத்திலே குடி கொண்டுள்ள அறியாமை என்ற மூடப்பழக்க வழக்கங்களும், கல்வி இல்லாமையும், உலகானுபவங்களை உணர்ந்து கொள்ள முடியாத நிலையுமே ஒழிய வேறு காரணங்கள் யாதும் இல்லை என்று துணிவுடன் கூறலாம்.

சிறையில் அடைபட்டுக் கிடக்கும் கைதிகளில் 100-க்கு சுமார் 95 பேர்கள் களவு செய்தும், பாக்கிப்பேர்கள் கொலை, சண்டைபோன்ற சில்லரைச் சச்சரவுகளின் காரணமாகவும்தான், சிறையில் அடைபட்டுக்கிடக்கிறார்கள். இந்தப்பரிதாபகரமானநிலையிலுள்ள இக்கைதிகள் எல்லோரும் குற்றவாளிகள்தானா? தண்டனைக்கு உரியவர்கள் தானா? சிறையில் அடைபட வேண்டியவர்கள்தானா? என்றால்; உடனே ஆம் என்று கூறிவிடுவீர்கள். ஆனால், மறுவினாடி கொஞ்சநேரம் சிந்தனை செய்து, ஏன்? திருடினான். ஏன்? கொலை செய்தான் என்ற கேள்விகளை எழுப்பி, பதில் சொல்ல ஆரம்பித்தால் குற்றவாளிகள் அல்லாத நிரபராதிகளே சிறைச் சாலையில் அடைபட்டு வதைபடுகிறார்கள் என்றே சொல்ல நேரிடும்''

''ஏனெனில் நாட்டிலே ஏற்பட்ட வறுமையும் வேலையில்லாத்திண்டாட்டமும், தலைவிரித்தாடி, மக்களைக்கசக்கிப்பிழிய ஆரம்பித்து விடுகிறது. இந்த இன்னலிலே அகப்பட்ட தோழன், வறுமையிலிருந்து தன்னை விடுவிக்க வழி கண்டுபிடிக்கிறான். அதன்படியே எங்கும் அலைகிறான் வேலையைத்தேடி. பலரிடம் மன்றாடி அடிபணிந்து வேண்டுகிறான். கெஞ்சுகிறான். கண்ணீர்வடிக்கிறான். கண்ட பலன் ரத்தக்கண்ணீர்தான். வறுமை அவனை வாட்டி வதை செய்கிறது. தன்னோடு எவ்வளவோ போராடித்தான் பார்க்கிறான். தன்னைக் கட்டுப்படுத்தவும் முயற்சிக்கிறான். ஒன்றும் முடியவில்லை. தற்கொலை செய்து கொள்ளலாமா என்று கூட யோசிக்கிறான். ஆனால் அதற்கு அவன் மனம் மறுத்துவிட்டு, ரத்தக் கொதிப்பைக் கிளறி ஆவேசத்தை மூட்டிவிடுகிறது. இந்த வேகத்திலேயே கிளம்பிவிடுகிறான் திருடுவதற்கு. ரொட்டித் துண்டு அளவேனும் திருடிவிட்டு, கிளிக்கூண்டிலே ஏற்றப்பட்டு, குற்றவாளியாக்கப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டு விடுகிறான்.

ஒரு சிலர் கேட்கலாம், வறுமையானால் மட்டும்தானா? களவுசெய்கிறார்கள் என்று. இல்லை, பேராசையின் காரணமாகவும் களவு செய்வோர் உண்டு. தரையிலே படுப்பவன், பாயிலே படுப்பவனைப் பார்த்துப் பொறாமைப்படுவதும், பாயிலே படுப்பவன், சமுக்காளத்திலே படுப்பவனைப்பார்த்துப் பொறாமைப்படுவதும், சமுக்காளத்திலே படுப்பவன், பஞ்சணை மெத்தையிலே படுப்பவனைப் பார்த்துப் பொறாமைப்படுவதும் இயல்பு. முறையுங்கூட. ஏனெனில் மனிதவர்க்கம் நாகரீகமாகவும், சுகபோகங்களையும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவது மனித இயல்பு. இவ்விதமிருக்கையில் ஒரு சாரார் சுகபோகங்களை அனுபவிப்பதும், பிறிதொரு சாரார் சுகபோகங்களை இழந்து வாழ்வதுமான நிலை நமது நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. எனவே மேலான வாழ்வு வாழ்பவர்களைப் போல நாமும் வாழவேண்டும் என்ற எண்ணம், சுகவாழ்வு அற்றோருக்கு ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் அந்த அளவுக்கு அவர்களுக்குப் பணவசதியில்லாமல் போய்விடுகிறது. அவர்கள் கண்ட ஒரேவழி களவு ஒன்றுதான். எனவே அந்த முறையைக் கையாளுகிறார்கள். அதற்குக் கிடைக்கும் பரிசு சிறை ஒன்றுதான்.

கொலைக் குற்றவாளிகளின் நிலையைக் கவனித்தாலும் அற்ப விஷயமாகத்தான் இருக்கிறது. சாதிச் சண்டை, சமயச்சண்டை, குடும்பச் சண்டை போன்றவைகளினால்தான், சச்சரவு ஏற்பட்டுக் கொலை போன்ற மகாபாதகச் செயல்கள் [illegible] பெற்று விடுகின்றன.

இதற்கெல்லாம் மூலகாரணம் அரசாங்கம் தான் என்று மலை உச்சியின்றும் கூறத்தயாராயிருக்கிறேன். ஏனெனில் நாட்டு மக்கள் உள்ளத்திலே, வெறுப்பையும் கொதிப்பையும் உண்டுபண்ணக் கூடிய அளவுக்கு, மேல்சாதி, கீழ் சாதி என்ற ஆயிரக்கணக்கான பிளவுகள் நாட்டிலே ஏற்பட்டு விபரீதவிளைவுகளை உண்டுபண்ணிக் கொண்டிருப்பதைக் கவனியாது, சிந்திக்காது, அதை ஒழிக்க முயற்சி எடுக்காத அரசாங்கம், இதன் காரணமாக குற்றமடைபவர்களுக்குத் தண்டனை கொடுப்பது எந்த வகையில் நேர்மையாகும்? அதே போல் களவு செய்பவர்கள். ஏன்? திருடுகிறார்கள்? என்ற கேள்வியை எழுப்பிச் சிந்தனை செய்தால், திருடுகிறவர்களுக்கு தண்டனை கொடுக்கும் அரசாங்கமே குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படவேண்டிய தேற்படும் என்று அறிவுலகம் நிச்சயமாகக்கூறும்.

ஏனெனில், உண்மையாகவே மக்களின் நல்வாழ்வு மீது கவலைகொண்ட அரசாங்கமாக இருக்குமேயானால், களவு செய்ததற்கப்பால் தண்டிப்பதைக் கைவிட்டு, நாட்டிலே ஏற்பட்ட வறுமையை ஒழிக்கவேண்டும். வேலை இல்லாதோருக்கு வேலைதேடிக் கொடுக்க வழி செய்யவேண்டும். சுரண்டும் வர்க்கம் ஒழிக்கப்படவேண்டும். கல்வியைப் பரப்பவேண்டும். இவை போன்ற பிறபல காரியங்களைச் செய்து, சமதர்மநாடாக்கவேண்டுமே தவிர, இதைக்கைவிட்டு, குற்றம் செய்ய வழியும் வகுத்துவிட்டு, தண்டனையும் கொடுத்துவிட்டால் மட்டும், நாட்டில் குற்றம் புரிவோரை திருத்திவிடுவதாகாது என்பதை ஆளும்வர்க்கம் உணரவேண்டும்.

சரி, இதுதான் போகட்டும். மத அடிப்படையிலே, மதப்பித்துப் பிடித்தவர்களாலும், சீமான்களாலும் ஆட்சி ஆளப்படுகிறது. அதனால் அவர்களுக்கு இதிலே நாட்டம் செல்லவில்லை என்றால், கைதிகளாக இன்று சிறையில் வாடுவோர், என்ன காரணங் கொண்டு கைதிகளானார்களோ, அந்தத்தன்மையை மாற்றுவதற்குண்டான பயிற்சியாவது சிறையில் கொடுக்கிறார்களா என்றால் அதுவுமில்லை.

ஏதோ கூறுகிறார்கள் கைதிகளுக்கு சிறையில் வேலை கொடுக்கப்படுகிறது என்று. அவ்விதம் பிரமாதமான வேலைகளோ, அறிவு பரப்பும் வேலைகளோ, அங்கு ஒன்றும் கிடையாது. பாய்முடைதல், நெசவு, அச்சகம், காவல் காப்பது, . சமையல் செய்வது போன்ற தொழில்களே கைதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இத்தொழில்களினால் கைதிகளின் பாழ்பட்ட மனோநிலை மாறிவிடுமா? என்பதை ஆளும் வர்க்கம் உணரவேண்டும்.

இருக்கும் தடையை நீக்காது, குற்றம் செய்ததற்கு அப்பால் தண்டனை கொடுத்து 21-ஆயிரம் பேர்களைச் சிறையில் பூட்டிவைத்திருப்பது, நாட்டிற்கு எவ்வளவு பெரிய நஷ்டம். நஷ்டமட்டுமல்ல, மானக்கேடும் அல்லவா? இந்த 21-ஆயிரம் பேர்களை நம்பி வாழும் குடும்பங்களில் உள்ளவர்களின் கணக்கை எடுத்துப் பார்த்தால் குறைந்த அளவு 50-ஆயிரமாவது இருக்குமே! இது எவ்வளவு பெரிய பரிதாபகரமான செயல் என்பதைச்சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்று சிறையில் அடைபட்டுக் கிடப்போருக்கு, அவர்கள் எக்காரணம் கொண்டு சிறைச்சாலையை நோக்கி விரைந்துவந்தார்களோ அந்தநிலையை மாற்றுவதற்குரிய கல்வி புகட்டவேண்டும். சாதி வேறுபாடு மத வேறுபாடு போன்ற பித்தத்தைத் தெளியவைக்கக் கூடிய மனிதத் தன்மையைப்போதிக்க வேண்டும். உலகானுபவங்களை அறிந்து கொள்ளப் பத்திரிக்கைகள் கொடுக்க வேண்டும். பொதுப்படையாக இன்று அரசியலின் காரணமாகச் சிறை சென்று, அதிலும் முதல் வகுப்புக் கைதிகளாகச்செல்வோருக்கே ஒரு பத்திரிக்கை மட்டும் (அதுவும் காங்கிரஸ் பத்திரிக்கை மட்டும்) கொடுக்கப் படுகிறது. மற்றவர்களுக்குச் சிறையில் அ. ஆ. என்ற எழுத்துவாசனையையே அறிய முடியாது. இந்த நிலையில் கைதிகள் நடத்தப்படுவதால் சீர்திருந்துவது எங்கே?

அதுமட்டுமல்ல, இன்று சிறையில் கிடக்கும் கைதிகளுக்குப் போர்ப் பயிற்சி கொடுத்தால் கூட இந்த நாட்டைப் பாதுகாப்பதற்கு அவர்களே போதுமே. இப்பேர்ப்பட்ட வீரத் தன்மையுடைய வாலிபர்களை வீணாகப் பாழ்படுத்திவிடக் கூடாது என்பதே என் ஆசை. இந்த முறைகளைக் கைவிட்டு, கைதிகளை மூத்திரச் சட்டியைத் தூக்கவைப்பதாலோ, கடுங்காவல் தண்டனை கொடுப்பதாலோ, சோளக்கஞ்சியை ஊற்றுவதாலோ, 5 கம்பிகளுக்குள்ளே தள்ளிப்பூட்டிவிடுவதாலோ, மக்கள் வெருண்டு சீர்திருந்திவிடுவார்கள் என்று எண்ணுவது அறிவுடைமையாகாது. ஏனெனில் பொதுப்படையாக நாட்டோர் அனைவருக்கும், குற்றம்செய்யப்பட்டவர்களுக்கு அரசாங்கம் என்ன தண்டனை கொடுக்கும், சிறையில் என்ன முறையில் நடத்தப்படும் என்பது நன்கு தெரியும். தெரிந்தே குற்றம் செய்து, உற்றார் உறவினர் அனைவரையும் துறந்து, சுகபோகங்களை இழந்து, சிறை செல்லத் துணிந்துவிடும் மக்கள், அரசாங்கம் கொடுக்கும் கடுங்காவல் தண்டனையைக் கண்டா வெருண்டு விடுவார்கள்! ஆம்! என்றால் வெள்ளைக்காரன் இந்நாட்டிற்கு வந்த

# முன்வருவார்களா?

1. இன்று கட்டாயப் பாடத்திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளது இந்தியா? இந்துஸ்தானியா?
2. காந்தியடிகள் இந்தியாவிற்குப் பொதுமொழியாக்க விரும்பியது இந்தியா? இந்துஸ்தானியா?
3. "இந்தி" தேசியமொழியா? அல்லது பொதுமொழியா?
4. பொது மொழி—தேசிய மொழி இரண்டிற்கும் வித்தியாசம் உண்டா? இல்லையா?
5. தேசீயம் என்பதன் பொருளென்ன?
6. இந்திதான் தேசீய மொழியென்றால் தமிழ் விதேசீய மொழியா?
7. இந்தியா ஒரு நாடா? அல்லது ஒரு உபகண்டமா?
8. இந்தியா ஒரு நாடானால், தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டி என்று ஒன்று இருக்கலாமா? இந்தியா ஓர் உபகண்டமாக இல்லாவிட்டால் All India Congress என்று கூறவேண்டிய அவசியம் என்ன? All Germeny, All French, கேள்விப்பட்டதுண்டா?
9. இன்றைய இந்தியாவிற்கு, Continent, Nation, இவற்றில் எது பொருத்தமான சொல்?
10. இந்தியாவிற்குப் பொதுமொழியாக ஒரு மொழிதான் வரலாமா? அல்லது 2, 3-மொழிகள் வரலாமா?
11. இன்றைய இந்தியாவிற்குப் பொதுமொழியாக வரவேண்டிய மொழிக்கு இருக்கவேண்டியஇலட்சணங்கள் என்னென்ன?
12. அந்த இலட்சணங்களெல்லாம் "இந்தி" யெனும் மொழிக்கு இருக்கின்றனவா?
13. இந்தியாவில் "இந்தி"தான் அதிகமான மக்களால் பேசப்படுவதாகக் கூறுகிறீர்களே, உண்மையான புள்ளி விபரங்கள் காட்ட முடியுமா?
14. நாங்கள் இந்தியை அரசியல் காரணங்களுக்காக எதிர்ப்பதாகக் கூறுகிறீர்களே, நீங்கள் எக்காரணங்கொண்டு, இந்தியைப் புகுத்துகிறீர்கள்? அரசியல் காரணம்கொண்டுதானே? அல்லது இந்தி உயர் தனிச் செம்மொழி என்கின்ற காரணத்தினாலா?
15. இந்தியாவிற்குப் பொதுமொழி இந்திதான் என்று யார் கூறியது? இந்திய மக்கள் அனைவரும் இந்திதான் பொதுமொழியென்பதை ஒப்புக்கொண்டார்களா?
16. தமிழகத்திலே, தமிழ் தெரியாத அனைவருக்கும், எழுதப்படிக்கத் தெரிய வசதிசெய்யப்பட்டு விட்டதா?
17. இந்நிலையில் தமிழ் படிக்க வருகின்ற ஒரு சிலருக்கும், இந்தியைக் கட்டாயப் பாடமாக்கப்படலாமா?
18. தேசீய மொழி இந்திதான் எனும் இந்தி மந்திரிகளுக்கு இந்தி தெரியுமா?
19. இந்தி மொழி வரலாற்றை, இந்தி ஆதரிப்புக்கூட்டம் சிறிது எடுத்துக்கூறுமா?
20. 2–பேரால்கூடப் பேசப்படாத பேசமுடியாத வடமொழியை, (சமஸ்கிருதத்தை) கட்டாயப்பாட வரிசையில் சேர்த்தது ஏன்?

மேற்கண்ட வினாக்களுக்கு, இந்தி மந்திரிகளோ அல்லது தங்களுக்காகத் தமிழையும் தியாகம் செய்யத் துணிந்த தியாகிகளோ பதில் கூற முன்வருவார்களா?

சு. தி. தெ.

கையின் அளவு இன்று சுதந்தர ஆட்சியில் கைதிகளின் எண்ணிக்கை குறைந்திருக்கவேண்டுமே? குறைந்திருக்கிறதா? இல்லையே! நாட்டிலே உள்ள வீட்டுப்பஞ்சத்தைப்போக்க, சாலைகளில் உள்ள அறைகளை அல்லவா பன்மடங்கு பெருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே இன்றுள்ள முறைகளை மாற்றி சிறையைப் பாசறையாக்க அரசாங்கம் ஆவன

# இராவண காவியம் எதற்கு?

"கோங்கிளங்கோ"

[✶]

(23-10-48 தொடர்ச்சி)

சென்ற கட்டுரையில் "பி. ஸ்ரீ." ஆச்சாரியார் அவர்கள் கம்பராமாயணம் இருக்க இராவண காவியம் எதற்கு? என்ற கேள்விக்குக் கூறியுள்ள விடைக்கு விளக்கந்தந்து, அவர் கூற்றைப் பொருந்தாப் பொய்க் கூற்றாக்கியுள்ளமை படிப்போர் அறிந்ததே. கம்பராமாயணத்தின் முதநூலும் மூல நூலுமான வான்மீகி ராமாயணத்திலேயே இராவணன் பராக்கிரமங்களும் ராக்ஷஸ ராஜ்யங்களின் சிறப்பும், விராதன், கும்பகர்ணன் முதலிய அரக்கர்களின் சிறப்பும் பலபடப் புனைந்துகூறியிருக்க, கம்பராமாயணமெதற்கு? என்னும் கேள்வி யெழுதலை மறந்து, அல்லது மறைத்துக் கம்பராமாயணமிருக்க இராவண காவியமெதற்கு? என்ற திரு. ஆச்சாரியாரின் பொறாமைக்கும், அறியாமைக்கும், இராவணன் முதலியோர்மேல் உள்ள வெறுப்புக்கும் ஒப்புமை கூறுதல் இல்லாத ஒன்றைக் கூறுதலோடு ஒக்கும். மேலும் தெய்வமொழியாகிய ஆரிய மொழியில், ஓர் ஆரிய மகரிஷியால் செய்யப்பட்ட நூல் அப்படியேயிருக்க, ஒரு சூத்திரனால், மக்கள்மொழி அல்லது தாழ்ந்த மொழியாகிய தமிழில் செய்த கம்பராமாயணத்தை ஏன் இவர் இவ்வளவு பெருமைப்படுத்தப் பாடுபட வேண்டும்? வடமொழியை விடத் தமிழும், வான்மீகியை விடக் கம்பரும் சிறந்தது, சிறந்தவர் என்னும் கொள்கைக்கு வந்துவிட்டாரா என்ன? அல்லது இராவண பக்தராக மாறிவிட்டாரா என்ன? வரவுமில்லை, மாறவுமில்லை. அப்படி அவர் ஒருபோதும் ஆகப்போவதும் இல்லை. இராவண காவியத்தின் மீது உள்ள அளவுக்கு மீறிய-எல்லை கடந்த வெறுப்புத்தான் அவரை அவ்வாறு மனக்குழப்பத்திற்காளாக்கி விட்டது.

இராவண காவியத்தின் மீது இவருக்குள்ள அளவு கடந்த வெறுப்புக்கு மற்றோர் உதாரணம்; சென்ற ஆண்டுத் தீவாவளி நோன்பின் போது, "ஜ்வாலா" என்னும் பார்ப்பனப் பத்திரிகை யொன்றில் "நரகாசுரன் திருவிளையாடல்" என்னும் தலைப்பில் இவர் எழுதியுள்ள கட்டுரையில், திராவிடக் கழகத்தையும், திராவிடர் கழகத்தோழர்களையும் திட்டுதிட்டென்று திட்டிவிட்டு, 'இலக்கியத்திலும் நரகாசுரன்' என்னும் உட்பிரிவில், "கம்பராமாயணம் உலகப்பொது நூலாக இருக்க, சிறந்த காவியமென உலகமே ஒப்புக்கொண்டிருக்க அதற்கு எதிராக ஒரு திராவிட வான்மீகியார் 'இராவண காவியம்' என ஒரு நூல் எழுதியிருக்கிறார்" என இராவண காவியத்தை வெறுத்துக் கூறியிருக்கிறார். அவ்வெறுப்புக்காய் இங்கு நன்கு முதிர்ந்து கனிந்திருக்கிறது. இராவணகாவியத்தின் சிறப்பைப் பார்ப்பனர் அறிந்துள்ளதில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூடத் தமிழர்கள் அறியவில்லை என்பதற்கு திரு. ஆச்சாரியார் கூற்றே ஏற்ற சான்றாகும்.

இனி, கவி நலங்கனிந்த, கற்பனை வளம் நிறைந்த, காமச்சுவை மிக்க, கலைக்களஞ்சியமான பல்லாயிரக் கணக்கான பாடல்களைக் கொண்ட கம்பராமாயணமிருக்க, அதில் இராவணன் பெருமை நலம்படக் கூறியிருக்க இராவண காவியமெதற்கு? எனில், அதுதான் 'பி. ஸ்ரீ.' போன்றவர்கள் இராவண காவியத்தை வெறுப்பதும், அவர்கள் விருப்பத்தின்படி அரசியலார் அதைப் பறிமுதல் செய்ததுமாகும். வான்மீகியார் ஒரு சாதாரண அரச குமாரனுக்குக் கூறியுள்ள இராமனைக் கம்பர் திருமாலின் திருவிறக்கம் ஆக்கினதும், எவளோ ஒருத்தி பெற்று எறிந்துவிட்டுச்செல்ல, ஜனகனால் கண்டெடுத்து வளர்க்கப்பட்ட சீதையைத்திருமகளின் திருவிறக்கமாக்கினதும், தமிழர் தலைவனான இராவணனை அரக்கர் தலைவனாக்கியதும், மானமிக்க மறத்தமிழர்களையும் வானரங்கள்—குரங்குகள் ஆக்கினதும், தமிழர்களைக் காட்டிக்கொடுத்த மானங்கெட்ட தமிழர்களை, ஆரிய அடிதாங்கிகளை ஆழ்வார்ப் பட்டங்கொடுத்துப் பெருமைப்படுத்தினதும், ஆன இன்னோரன்ன போலிப் பொய்க்கூற்றுகளைப் போக்குவதற்கேயாகும். கம்பராமாயணத்தை உண்மையென நம்பி, கம்பர் கவிச்சுவையில் ஆழ்ந்து, காமச்சுவையில் வீழ்ந்து, இராவணன் முதலிய தமிழர் தலைவர்களை அரக்கர் எனவும், தமிழர்களாகிய தங்களுக்கும் அவர்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லையெனவும் கொண்டு, இராவணன் முதலியோர் தங்களுக்கு ஏதோ செய்யத்தகாத தீங்கு செய்தனர் போலவும், தங்களது தீராக்குலப் பகைவர் போலவும் கொண்டு, கம்பனைக் காட்டிலும் கடைப்பட்ட முறையில் அவர்களைக் காய்மொழி கூறிக் கடிவதும், தமிழர்குலப் பகைவனான ஆரியராமனைப் புகழ்வேதோடமையாது கோயில் கட்டிக்கும்பிட்டு வருவதுமாகிய தமிழ் மக்களது அறியாமையைப் போக்கி அறிவு கொளுத்தவேயாகும்.

பழந்தமிழ் அரசகுடும்பத்தில் பிறந்து, ஒரு நாட்டை ஆண்டு வந்த தமிழரசியாகிய காமவல்லியை (சூர்ப்பநகை) கொடுங்குணமும், கடுஞ்செயலும், காமப்பித்துக்கொண்ட கண்ணால் காண முடியாத அழகில்லா அரக்கியெனவும், அவளை மூக்குமுலையறுத்துக் கொன்றது தகும் எனவும், மூக்கு முலையிழந்த அவள் அக்கோலத்துடன் ஆயிரங்கல் தொலைவிலுள்ள விந்தச் சாரலிலிருந்து இலங்கை சென்று, மான வெட்கமின்றித் தன் அண்ணனிடம் சீதையின் சிறப்புக் கூறினதாகவும், அதுகேட்ட அரக்கனாகிய இராவணன் தங்கையின் மானக் கேட்டைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாதவனாய்ச்சீதைமீது காதல் கொண்டு சென்று சிறையெடுத்து வந்ததாகவும் கூறும் பெரும் பழிகளை அப்படியே நம்பி, தங்கள் தமிழ்த் தலைவனையும், தலைவியையும் நாத்தழும்பேறப்பழித்து வரும் தமிழர்களுக்கு உண்மையை உணர்த்தி, இனவுணர்ச்சியுண்டாக்கி, அத்தமிழ்த் தலைவர்கள் மீது சுமத்தப்பட்ட பெரும் பழியைத் துடைப்பதற்கேயாகும்.

தன்னாட்டில் தனித்துலவிய ஒரு தமிழ்த்தலைவியைக் கண்டுகாமுற்று, அவள் தடுத்துங் கேளாது வற்புறுத்தவே மீறிச்சென்ற அத்தமிழ்த்தையலைத் தம்பியைக் கொண்டு மூக்கு முலையறுத்துக் கொன்ற ராமனது அறக்கொடுஞ்செயலை, அறிவற்ற அழிசெயலை, புல்லறிவோடுபட்ட புன்செயலைத் தமிழர்களறிந்து, கம்பன் சொல்லில் மயங்கி இவ்வளவு காலமாய் அக்கொடியோனைக் கடவுளெனக் கொண்டு வணங்கிவந்த தீச்செயலின் கழுவாயாக, இராவணன் தமிழர்தலைவன், தன்மான முடையவன், தமிழர்களுக்காக, தமிழர் வாழ்வுக்காகத் தனிக்களத் தொருவனாய் உயிர்விட்டவன் எனத் தமிழர்கள் உணர்ந்து தமது தவற்றைத் திருத்திக் கொள்வதற்கேயாகும்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 30-ம் நாள் போர்.

சென்னை நவ 11.

வழக்கம்போல் தோழியர் அலமேலு அம்மையார் தோழர்களான சாளைகபீர், கலைச்செல்வன், பாண்டியன், திராவிடமணி ஆகியோர் காலை 9-30 முதல் 10-30 வரை மறியல் செய்தனர்.

வரும்போதும் திரும்பும் போதும் பொது மக்களின் எதிர்ப்பொலி முழக்கம். வழியில் வியாபாரிகளும் மாணவர்களும் தொண்டர்களுக்கு மாலையணிந்து சோடா, காபி வழங்கினர்.

மறியல் நடைபெறுமிடத்திற்கு மக்கள் அனுமதிக்கப்படவில்லை.

# குடி அரசு

20—11—48 சனிக்கிழமை.

## டில்லியில் சென்னை !

—————o—————

சென்ற 2 வாரங்களுக்கு முன்னால், சென்னை தேசியப் பத்திரிகைகள் எல்லாம் "சென்னையில் டில்லி" என்று தலைப்புக் கொடுத்து, ஏகாதிபத்திய ஆணவத் திமிரினால் "டில்லி" என்றுபெயர் மாற்றப்பட்ட இங்கிலீஷ்ப் போர்க் கப்பல் ஒன்று சென்னைத் துறை முகத்துக்கு வந்திருந்ததைத் தெரிவித்தன. இந்த நாம் "டில்லியில் சென்னை" என்று குறிப்பிடுவதைக் கண்டு, தன்மான உணர்ச்சி பெற்ற சென்னை மாகாண வாசிகள் தங்களின் கப்பலுக்குச் சென்னை என்று பெயர் கொடுத்து, அதனை டில்லியில் கொண்டு நிறுத்தி, டில்லி வாசிகளுக்கு—வடநாட்டு ஏகாதிபத்தியத் தலைமைப்பீடத்திற்குத் தங்களின் இயற்கையான கடல் வசதியையும், பரம்பரையான கப்பல் தொழிலையும் காண்பிக்கும் அறிகுறியாக, வெள்ளையன் கொடுத்த வேதனைகளுக்கெல்லாம் ஆளாகியும் வெள்ளையனோடு போட்டி போடும் முறையில் அக்காலத்தில் கப்பலோட்டிய வீரத் தமிழனை நினைப்பூட்டும் வகையில், காண்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களோ என்று எவரும் எண்ணிவிடமுடியாது. ஏன்? நம் சென்னை சர்க்காருக்கு அப்படிப் பட்ட சுயசிந்தனையோ, தன்னுரிமையோ, மானத்தைப் பேணும் கவலையோ அறவே இல்லை என்பதை மக்கள் அறிவார்கள். மேலும் டில்லியில் கடலே இல்லை என்பதையும் அறிவார்கள். அப்படியிருக்க இந்த நாம் "டில்லியில் சென்னை" என்று குறிப்பிடுவது எதற்காக என்றால், கொள்முதல் செய்வதற்காக நம் மாகாணப் பிரதமர் இந்தமுறை டில்லி சென்று அங்கு சில நாள் தங்கியிருந்து 4 நாளைக்கு முன் சென்னை திரும்பியிருக்கிறாரே அந்த நிகழ்ச்சியைத்தான் "டில்லியில் சென்னை" என்று குறிப்பிடுகிறோம்.

பிரதமர் ஓமந்தூரார் அவர்கள் இந்தத் தடவை டில்லிக்குச் செல்லும்போது, எதைக்காரணமாகக் கூறி எந்தப் பெயரால் சென்றிருந்தாலும்கூட, டில்லியில் சென்று புத்தி கொள்முதல் செய்யும் வாடிக்கையான தொழிலுக்கு, இந்தத் தடவை நல்ல சந்தர்ப்பமாக இருந்திருக்கிறது என்பதையே நாம் டில்லியில் சென்னை என்று குறிப்பிடுகிறோம்.

"சென்னையில் டில்லி" டில்லியின் சிறப்புக்கும், ஏகாதிபத்திய மேன்மைக்கும் உரியதாகவும், நாம் குறிப்பிடும் "டில்லியில் சென்னை" சென்னையின் சீர் குலைவுக்கும் அடிமை மோகத்துக்கும் அறிகுறியாகவும் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டேதான் டில்லியில் சென்னை என்று குறிப்பிடுகிறோம். ஏன்?

நமது பிரதமர் அவர்கள் இந்தத் தடவை டில்லிக்குச் சென்ற சமயத்தில்தான் அ. நி. சபை நாடகக் கம்பெனியாரின் முதல் சீன் ஆரம்பமாயிற்று. அந்த முதல் காட்சியிலேயே நாடகத்தின் நாயகப் பாத்திரமாய் விளங்கும் பிரதமமந்திரியான தோழர் ஜவஹர்லால்நேரு அவர்கள், இந்தியாவின் பொது மொழிபற்றிய தன்னுடைய கருத்தை வெளியிட்டிருக்கும செதியை, "அவர்கள் பேசினார்கள்" என்ற தலைப்பில் நாம் சென்ற வாரமே தந்திருக்கிறோம்.

"நானும் இன்னும் இதர பல நண்பர்களும் இந்த ஆங்கிலத்தில் தான் பேசவேண்டியிருக்கிறது. இதிலிருந்து இந்தப்பொது மொழி இந்திதான் என்கிற பிரச்னையில் ஏதோ கோளாறு இருப்பது தெரியவில்லையா" என்று அவர் கேட்கிறார். யாரை? இந்தியாவின் பொதுமொழி இந்திதான் என்பவர்களை நோக்கி.

ஒரு தனி நபர் அல்லது ஒரு நாட்டின் வாழ்வில், நபரின் தாய் மொழி அல்லது அந்த நாட்டின் மொழி கேந்திரஸ்தானத்தை வகிக்கிறது என்கிற உண்மையைமறந்து விட்டீர்களா என்கிறார். யாரை? தாய்மொழியை அல்லது நாட்டு மொழியைக்கட்டாயப்படுத்தாமல், கட்டாயப்படுத்தி அனைவரையும் படிக்கச் செய்யாமல் பெரும்பாலோர்? பேசுகிறார்கள் என்கிற காரணத்தின் மீது, இந்தி மொழியை இந்தி வழங்காத மற்ற இடங்களில் கட்டாயப்படுத்தும் கடைகெட்ட போக்குடையவர்களை நோக்கி.

"ஒரு முக்கிய விஷயத்தில் மெஜாரிட்டி ஓட்டுகளால் மைனாரிட்டிகள்மீது எதையாவது திணித்தால் திணிப்பவர்களுடைய லட்சியம் நிறைவேறாது......இதற்குக் கடும் எதிர்ப்பு இருப்பதோடு முயற்சியாளர்களின்விருப்பத்திற்கு நேர் மாறான நிலைமை ஏற்படுவதும் இயல்பு" என்கிறார் ஜவஹர். யாருக்கு? சென்னை மாகாணக் காங்கரஸ் மந்திரிகளுக்கு. ஏன்? சென்னையைத் தவிர மற்ற இந்தி வழங்காத மாகாணங்களில், அங்குள்ள மந்திரிகளில் எவரும் இந்தக் கடைகெட்ட காட்டிக் கொடுக்கும் போக்கைக் கைக்கொள்ளவில்லை.

"அகில இந்திய மொழிபற்றி எனக்கும் மற்றவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம். அதற்காக என் யோசனையைப் பிறர்மீது நான் திணிக்க மாட்டேன் என்கிறார் இந்தியாவின் பிரதம மந்திரி. யாருக்கு இந்தச் சாடை? அதிகார பீடத்தில் ஏறி இருக்கும் ஆணவ உணர்ச்சியால் சட்டத்தின் மூலம் தங்களின் அடிமை உற்பத்திப் பெருக்குத் திட்டத்தை நிறைவேற்றிவிடலாம் எனக் கனவுகாண்பவர்களுக்கு.

அ. நி. சபையில் இந்த மாதம் 8-ம் தேதி மந்திரியின் புத்தி விற்பனை இப்படியிருக்க, இதையொட்டி இந்த மாதம் 11-ம் தேதி பெங்களூரில் விஞ்ஞான நிபுணர் சர். சி. வி. ராமனும் தன்னுடைய கருத்தைக் கூறியிருக்கிறார்.

"உலகத்திலேயே, உலக மக்களில் பாதிப்பேர் ஆங்கிலம் பேசுகின்றனர். இந்தியா ஏதோ ஒரு அளவுக்கு விஞ்ஞான அறிவு பெற்றிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் ஆங்கில மொழியின் நுழைவுதான். ஆங்கிலம் இருக்குமிடத்தில் இந்தியைக் கொண்டு வந்து நுழைத்தால் அதன் முடிவு என்ன? சர்வ தேசக் கலாச்சாரம்

நாகரீகம் ஆகியவைகளிலிருந்து இந்தியா விலகிக் கிணற்றுத் தவளையாக உலகானுபவமோ, விஞ்ஞான அறிவோ பெற வசதியின்றிப் புராணக் குட்டைக்குத் திரும்ப வேண்டியதுதானே'' என்கிறார்.

மேலும் "இயற்கையாகவே சேர்த்திருக்க முடியாத இந்த இந்திய உபகண்டத்தை, வெள்ளையன் துப்பாக்கி முனையினால் ஆளும் வசதிக்காக ஒரு நாடாகச் செய்ய, அதை வைத்துக்கொண்டு இந்தியா ஒரு நாடு என்கிற பல்லவியை விடாமல் பாடிக்கொண்டு வருவது நிலைக்கவேண்டுமானால், அதற்கு வழி இந்தியைப் பொதுமொழியாக்குவதல்ல. ஆங்கிலத்தைப் பொதுமொழியாக்குவதுதான் அதற்கு வழி என்கிறார் விஞ்ஞான நிபுணர். யாருக்கு? இந்திக்கு அடிமையாக்கும் இந்நாட்டுக் கங்காணிகளுக்குத்தானே!

ஆளும் பிரதம மந்திரியார், அறிவுத் துறை நிபுணர் ஆகியோர் புத்தி விற்பனை இப்படியிருக்க, சென்னை மாகாணத்தில் இந்தியைப் பரப்பும் திருப்பணியை மேற்கொண்டிருக்கும் இந்திப் பிரசாரச் சபைத் தலைவர் தோழர் சத்தியநாராயணா இந்த மாதம் 14-ம் தேதி டெல்லியில் தன் அனுபவக் கருத்துக்களை ஒரு அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்.

இவர் சென்ற 25-ஆண்டுகளாக இந்திப் பிரச்சார சபைத் தலைவராகத் தென்னாட்டில் இருப்பவர். 'மாகாண நலத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலும், மாகாண மொழிகளின் வளர்ச்சிக்கு மாறாகவும் திணிக்கப்பெறும் மொழி எதுவும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாததுதான். கட்டாயமின்றி இயல்பாக பிறர் உரிமையைக் கெடுக்காமல் செய்யப்படும் காரியந்தான் வெற்றி பயக்கும்'' என்கிறார்.

இந்த அறிக்கை அ.பி. சபையில் பேசிய வடநாட்டு இந்திமொழி வெறியர்களுக்காக விடப்பட்டதென்றாலும், அறிக்கையிலுள்ள மேலே காட்டிய பகுதி நமது மாகாண மந்திரிகளின் திமிர்வாதத்திற்குக் கூறப்பட்ட மருந்து என்றுதான் நாம் நினைக்கின்றோம்.

இந்த நேரத்தில் தனக்கும் புத்தி வந்து விட்டது என்று சொல்லிக்கொண்டு, தோழர் ஜவஹருடைய பேச்சுக்குப் பிறகு காமராஜரும் ஒரு பல்டியடிக்கிறார். தமிழ்நாட்டுக் காங்கரஸ் தலைவரான தோழர் காமராஜர் அவர்கள் இந்தி எங்கே கட்டாயம்? எப்படிக் கட்டாயமாகும்? என்று இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஏற்பட்ட நாள் முதல் பேசி வந்தவர். அப்பேர்ப்பட்ட மகானுபாவர் இந்த மாதம் 14ம் நாள் பூலாங்குறிச்சியில் இராமநாதபுரம் ஜில்லா மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசிய போது, "முன்பு இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியபோது 1800 பேர் சிறை சென்றதை நினைக்காமல் கல்வி மந்திரி ஓர் அறிக்கை வெளியிட்டதால் [அதாவது தமிழ் நாட்டுக்கும் இந்தி கட்டாயம்தான் என்கிற அறிக்கை] வேண்டாத ஓர் நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும், இந்தியை இந்த மாகாணத்தில் கட்டாயப்படுத்தக்கூடாதுஎன்பதுதான் தன் சொந்த அபிப்பிராயம் என்றும் கூறியிருக்கிறார்.

## நல்லது !

கல்வி மந்திரி பதவியிலிருந்து அவினாசியார் எவ்வளவு சீக்கிரம் மாற்றப்படுகிறாரோ அவ்வளவுக்கவ்வளவு கல்விக்கும் சென்னை சர்க்காருக்கும் நலம்.

எம். ரத்தினசாமி.

[முன்னாள் அ'பல்கலைக்கழக துணைவேந்தர்.]

இந்த மாநாட்டிலேயே தோழர் காமராஜர் அவர்கள், "எது நலமில்லையோ அதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்'' என்றுசொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லுகிற ஞான சிகாமணி, இந்தியைக்கட்டாயப்படுத்தக் கூடாது என்பதுதான் என்னுடைய சொந்த அபிப்பிராயம் என்றும் சொல்லுகிறார் என்றால், இத்தனை நாளாக எங்கு அடகு வைத்திருந்தார் என்கிறகேள்வி பிறக்கின்றதல்லவா? இதற்கு விடையாக அவர்பேசிய கருத்துகளைப் பத்திரிகைகள் தரவில்லை. மந்திரிகள் ஒருவரை யொருவர் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். அப்படியில்லாமல் திடீர் திடீரென்று தான்தோன்றித்தனமாக ஒவ்வொரு மந்திரியும் ஒவ்வொரு உத்தரவைப்போட்டு விடுகிறார்கள். அதற்கு நாட்டிலிருந்து எதிர்ப்பு உண்டாகும்போது அதையடக்க மற்ற மந்திரிகளும் அந்த அறிக்கையை ஆதரிக்கவேண்டியிருக்கிறது. மந்திரிகள் ஆதரிக்கின்றார்கள் என்றவுடன் காங்கரஸ் தலைவர்களும் அதைத் தாங்கி நின்று பேச வேண்டியதாயிருக்கிறது என்பதாக அன்று அவர் பேசியிருக்கிறார் என அறிகிறோம். ஆனால் அவரின் முன்னுக்குப் பின் முரணான இந்தப் பேச்சு, அவரடித்திருக்கும் பல்டிக்குச் சமாதானமாகி விடுமா? அவரின் அரசியல் ஞானத்தைக் காண்பிக்கிறதா? என்பவைகளை மக்களின் சிந்தனைக்கே விட்டு விடுகிறோம். மேலும் 8-ம் நாள் தோழர் ஜவஹர் பேசினார் என்பதையும் 14-ம் நாள் தோழர் காமராஜர் பேசியிருக்கிறார் என்பதையும் நினைவு மூட்டுகிறோம்.

டில்லியிலிருந்து இந்த மாதம் 16-ம் நாள் சென்னைக்குத் திரும்பிய சென்னை பிரதமர் அவர்கள், டில்லியிலேயே சரியானபடி புத்தி கொள்முதல் செய்திருக்கவேண்டும். "எட்டினவரைக்கும் தலையால் தாங்கினேன், இனி நான் தான் என்ன செய்ய முடியும்'' என்று சமயத்தில் கைவிட்டு விடும் காமராஜர்களின் சுய உருவத்தையும் தெரிந்து கொண்டிருக்கவேண்டும். இந்தச் சந்தர்ப்பம், மீசையில் மண் ஒட்டவில்லை என்று சொல்லி கட்டாய இந்தியைக் கைவிடுவதற்கு நல்ல சந்தர்ப்பமென்றே நாம் நினைக்கிறோம். ஆனால் ஓமந்தூரார் அங்கு கொள்முதல் செய்யப்போயிருந்தும் ஏமாந்து திரும்பினாரோ அல்லது அவினாசியார் போன்ற ஆகாத துணைவர்களின் கூட்டுறவில் மயங்கினாரோ நாம் அறியோம்.

ஹைதராபாத் போரின் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த அறப்போர், ஈரோட்டுமாநாட்டிற்குப் பின் மாநாட்டு முடிவுப்படி இந்த மாதம் 2-ம் நாள் முதல் தொடர்ந்து நடைபெற்று வருவதையும், இதனுடைய பின் விளைவுகளைப் பற்றியும் தேசீயத் தாள்கள் கட்டுப்பாடாக இருட்டடிப்பு செய்து விட்டதென்றாலும், மத்திய சர்க்கார் தன் கண்ணையும் காதையும் இழந்து விடவில்லை என்பதைக் காட்டுவதே பிரதம மந்திரியாரின் பேச்சு.

தான் ஒரு பார்ப்பனராய் இருந்

தாலும் பழைய காட்டுமிராண்டித்தனத்திற்கு மக்களைத் திருப்புவது கூடாது என்பதுதான் விஞ்ஞான நிபுணரின் விளக்கவுரை.

தான் இந்திப் பிரசாரச் சபைத் தலைவனாயிருந்தாலும், தமிழ் மந்திரிகளின் தன்மானமற்ற நடத்தை சகிக்கமுடியவில்லை என்பதுதான் சத்தியநாராயணாவின் அறிக்கை.

தான் காங்கரஸ் தலைவன் என்கிற காரணத்தினாலும், காங்கரஸ் மாகாண மந்திரிகள் நடத்தை என்பதனாலுமே எனக்கு விருப்பமில்லாமலிருந்தும் ஆதரித்தேன். மேலிடம் கருத்தை மாற்றிக் கொண்டுவிடும் என்பதை அறிந்திருந்தேன் என்றால் நானே தைரியமாகக் கூடாது என்று சொல்லியிருப்பேனே! என்கிற ஒப்பாரிதான் காமராஜரின் கவைக்குதவாத, காலங்கடந்த பேச்சு.

இப்போது "டெல்லியில் சென்னை" என்ன கண்டதோ? என்ன கேட்டதோ? எவ்வளவு தூரம் கொள்முதல் ஆகியிருக்கிறதோ? யார் கண்டது? நாட்கள் பதில் சொல்லும்.

★

## அ' பல்கலைக்கழகத் துணை வேந்தர்.

—()●()—

அண்ணாமலைப்பல்கலைக்கழக துணை வேந்தராக பிரசிடென்ஸி கல்லூரி பிரின்ஸ்பாலாக உள்ள தோழர் மணவாள ராமானுஜம் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார் என அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். தோழர் ராமானுஜம் அவர்கள் கல்வித்துறையில் பொறுப்புள்ள பதவிகளை ஏற்று, திறம்பட நிர்வகிக்கத்தக்க பேராற்றல் வாய்ந்தவர். உருப்படியான காரியங்களைச் செய்யவேண்டும் என்கிற முயற்சியுடையவர். இத்தகைய அறிஞர்கள் எல்லாம் இன்று குடத்துள் விளக்காகத்தான் இருந்துவரும்படியாய் இருக்கிறது என்பதையும், இதே ராமானுஜம் அவர்கள் ஒரு அய்யங்காராய் மட்டும் இருந்திருப்பாரேயானால் இன்றைய மத்திய சர்க்காரில் அபுல்கலாம் ஆசாத்தின் இடத்தில் நிச்சயம் வீற்றிருக்க முடியும் என்பதையும் இந்த நேரத்தில் நம்மால் நினைக்காமலிருக்க முடியாது.

அ' பல்கலைக் கழகத்திற்குத் துணை வேந்தரைக் குறிப்பிடும் பொறுப்பு ராஜா சர். குடும்பத்திற்கு உண்டென்றும், அவர்கள் குறிப்பிடும் மூவரில் யாரேனும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டிய பொறுப்பு மாகாணக் கவர்னருக்கு உண்டென்றும் அறிகின்றோம். இந்தப்பதவிக்கு சர். சி. வி. ராமன் அவர்களுடைய பெயரும் மற்றொரு பார்ப்பனருடைய பெயரும் பத்திரிகைகளில் முன்பு அடிபட்டன. அவர்கள் மறுத்து விட்டார்கள் என்கிற செய்தியும் பின்பு வந்தன. அதன் பின் இப்போது தோழர் மணவாள ராமானுஜம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அ' பல்கலைக்கழகத்திற்கு புரோசான்ஸலராக் இருப்பவர் இப்போது ராஜா சர். முத்தையா செட்டியாரவர்கள். இவர் தலைமையாயிருக்கும் டிரஸ்டியில் நடக்கும் பச்சையப்பன் கல்லூரிக்குத்தான், அது ஒரு திராவிடரின் உடமையாயிருந்தும், திராவிட மாணவர்களே அங்கு பெரும்பாலோராய்ப் படித்து வருகின்றார்கள், என்கிற நிலையிருந்தும், 100-க்கு 100-திராவிடர்களே டிரஸ்டிகளாயிருந்தும், திராவிடப் பத்திரிகைகள் போட்ட கூக்குரலுக்குச் செவி கொடுக்காமல், ஒரு பார்ப்பனர் பிரின்ஸ்பாலாக நியமிக்கப்பட்டார் என்றால், இவரின் நேரடியான நிர்வாகப் பொறுப்பிலிருக்கும், தமிழ் பல்கலைக் கழகம் என்று சொல்லிக் கொள்ளப்படும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குக் கூடவா ஒரு பார்ப்பனரை வைஸ்சான்ஸலராகக் கொண்டுவர மனதால் நினைப்பது? இதென்ன அக்கிரமம்? ஏன் இந்த நிலை?

பார்ப்பன பனியாக்களின் கூட்டாட்சியில், பண மூட்டைகள் எல்லாம் அவர்களுக்கு ஒத்தூதித் தாளம் போட வேண்டியதுதான், பண மூட்டைகளுக்கு நல்லது என்கிற ஒரு நியாயத்தைத் தவிர தோழர் முத்தையா அவர்களின் இந்த நடத்தைக்கு வேறு என்ன நியாயம் சொல்லிவிடமுடியும்? இருந்தாலும் சொல்லுகிறோம் இந்தப் போக்கு நல்லதல்ல! இன அழிவுக்கு ஆக்கம் தரும் செயல் இது என்று!

பார்ப்பனர்கள் கட்டுப்பாடாகத் தங்கள் நிர்வாகப் பொறுப்பில், நடத்தையில் எல்லாம் பார்ப்பனர்களுக்கே அனுகூலமாகச் செய்து வருகின்றார்கள் என்பதைப் படித்திருக்கும் பண மூட்டைகளே, இந்தமாதிரி நெல்லு மூட்டைக்குள் பெருச்சாளிகளைப் பிடித்துப் போட எண்ணுகிறார்கள் என்றால், மற்ற பண மூட்டைகளுக்கு எங்கிருந்து இனவுணர்ச்சி வந்துவிட முடியும்? எப்போது தான் இவர்களுக்கு இனவுணர்ச்சி என்பது வருமோ?

## இந்தி எதிர்ப்பு மறியல்.

### 31-ம் நாள் போர்.

சென்னை நவ 12.

இன்றும் வழக்கம் போலவே அய்வரின் மறியல். தொண்டர்கள் முத்தியாலுப்பேட்டை திராவிடகழகத் தலைவர் இல்லத்திலிருந்து புறப்பட்டனர். வழியில் பல தோழர்களின் உபசரிப்பைத் தொண்டர்கள் பெற்றார்கள்.

பின் தொடர்ந்த பொது மக்களை, தொலைவிலேயே செல்லுமாறு போலீசார் செய்தனர்.

●

## வருந்துகிறோம்.

●

பழைய கோட்டைப் பட்டக்காரர் உயர்திரு. ந. நல்ல சேனாதிபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்களின் தங்கையான [நம் மறைந்த தளபதி அர்ச்சுனன் அவர்களின் நேர் தங்கை] தோழியர் அம்மணி ஆத்தாள் அவர்கள் 18—11—48-ம் நாள் மாலை 6-மணியளவில் இயற்கையடைந்தார்கள் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

பட்டக்காரர் அவர்களுக்கும் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

●

## குடி அரசு அறிவிப்பு.

-(●)-

ஏஜண்டு தோழர்கள் அதிகப் பாக்கி வைத்துக் கொண்டு இதுவரையில் அனுப்பாமல் இருந்துவருவதையொட்டி மீண்டும் இறுதியாக கூறுகிறோம் 24—11—48உக்குள் தங்கள் பாக்கியை அனுப்பாவிட்டால் 25—11—48ல் வெளிவரும் நமது விடுதலை தினசரி பேப்பரில் அவர்கள் பெயர்களை விளம்பரப்படுத்தப்படும் என்பதைக் கண்டிப்பாய் அறியவும்.

மானேஜர், குடி அரசு, ஈரோடு,

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கம்பன் கூற்றுப்படியே, தன் மீது காதல் கொண்ட ஒரு பெண் 'அரக்கி யாக இருந்தாலுங்கூடத் தன் சொல் வன்மையால் அவள் மனத்தை மாற்றி யனுப்பும் ஆற்றலிலாது தம்பியைக் கொண்டு உருக்குலைத்துக் கொன்ற ராமனை நல்லவனென்றும், தனித் துலவிய ராமன் மீது காதல் கொண்ட காமவல்லியைக் கெட்டவளென்றும் கொண்டு தங்கள் கண்முன் கொண்டு வந்து நிறுத்திக் கண்டபடி பழித்துக் கூறும் தமிழ்மக்களது அறியாமையைப் போக்கி, ஒரு பெண்ணின் மனத்தை மாற்ற முடியாதவன் எங்ஙனம் கடவுள் ஆகமுடியும்? ஒருவன் மீது காதல் கொள்வது முலைமூக்கறுக்கக் கூடிய அவ்வளவு பெரிய குற்றமா? என்னும் ஆராய்ச்சியறிவைத் தமிழர்க்குண் டாக்கி, காமவல்லியை உருக்குலைத்த ராமன் செயல் கொடியது என்னும் நல்ல தீர்ப்புக் கூறவேயாகும்.

தன்னாட்டுக்குள் புகுந்து குடிமக்க ளின் ஆடுமாடுகளைத் திருடிக் கொலை வேள்வி செய்துவந்த ஆரியர் செய லைக் கண்டித்து, வேள்வி செய்யாமல் தடுத்து வந்த தாடகையென்னும் தமிழ் மூதரசியைப் பெண்ணென்றும், முதியாளென்றும் பாராமல் விஸ்வாமித் திரன் என்னும் ஆரியமுனிவன் சொற் படி கொன்ற இராமன் செயலைப் போற்றியும், கொலை வேள்வியை மறுத்து வந்த தாடகை செயலைத் தூற்றியும், அவ்வரக்கியைக் கொன் றது சரியே. முனிவர்கள் செய்து வந்த வேள்வியை அழித்த கொடியாள் ஒழிந்தாள். ஒரே அம்பில் ராமச்சந்தி ரன் அவளைக் கொன்று அறத்தை நிலை நாட்டினான் என்னும் வெற்று ரையை அப்படியே நம்பி ராமனைப் போற்றிப்புகழ்ந்து, தமிழ் மூதாட்டி யைத் தூற்றியிகழ்ந்து வரும் தமிழர் களின் மயக்கவுணர்வைப் போக்கி, உண்மையை உணரும்படி செய்யவே யாகும். தாடகை அரக்கியல்லள். விந்தச்சாரலில் அமைந்திருந்த ஒரு நாட்டையாண்டு வந்த தமிழரசி. ஆண் மக்கள் கண்டு அஞ்சும்படி செங்கோல் செலுத்திய செவ்வியள். ஒழுக்கமே உருவானவள். கொலைமறுத்த குணப் பெருங்குன்றம். அவள் செய்த பெருங் குற்றமெல்லாம் கொலை வேள்வியை மறுத்ததேயாகும். அயல் நாடர்களா கிய ஆரியர்கள் தமிழ் நாட்டுக்குள் வந்ததே குற்றமாயிருக்க, அந்நாட் டரசி சொல்லையுந்தட்டிக் கொலை வேள்வி செய்ததை மறுத்த அரசி யைக் கொன்றது கொடுமையினும் கொடுமை! பெண் கொலைக்கஞ்சாப் பாவியாகிய ராமன் அறக்கொடியோன் என்பதைத் தமிழர்கள் உணரும்படி செய்யவேயாகும்.

தமிழரைத்தன் ஆட்சல் பாமல்களால்

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 32ம் நாள் போர்.

சென்னை நவ 15.

வழக்கம்போல் முத்தியாலுப்பேட் டை கழகத்தலைவர் வீட்டிலிருந்து புறப்பட்டு வந்து 10-30 வரை 1 மணி நேரம் தொண்டர்கள் அய்வரும் மறி யல் செய்தனர்.

வந்த சவரி என்னும் ஆரியப் பெண் ணைத் தமிழ்ப் பெண்ணென்றும், ராம னிடம் கொண்டிருந்த அன்பினால் பரம பதம் அடைந்தவள் என்றும் கொண்டு, அக்கொடியாளை நல்லவள் எனக்கொண்டு, மனமுருகப் போற்றிப் புகழ்ந்து வரும் உண்மையறியாத் தமிழர்க்கு அத்தூர்த்தியின் அய்ந்தாம் படை வேலையை அறிவுறுத்தி, இன் றும் தமிழ் நாட்டில் பல சவரிகள் உண்டு, ஏமாறாதீர்கள் என்று எச்ச ரிக்கை செய்வதற்கேயாகும்.

ஆரிய ராமன் ஏழிரண்டாண்டு பூழி வெங்கான வாழ்க்கை நடத்த மட்டும் வரவில்லை. தமிழ் நாட்டில் ஆரிய ஆதிக்கத்தை நிலைநாட்டவே வந் தான். வடநாட்டில் காடு மலையா இல்லை? தமிழ் நாட்டுக்குள் ஏன் வர வேண்டும்? தமிழர் தலைவரை வஞ் சித்துக்கொன்று தங்களாதிக்கத்தை இங்கு நிலைநாட்ட ஆரிய முனிவர்கள் அழைத்து வந்தனர். காமவல்லியைக் காணும்படி செய்தனர். தமிழ் நாட் டின் பல பக்கங்களிலுமிருந்து உளவு வேலை செய்து வந்தனர். மறைந் துறைந்து வஞ்சகம் செய்தனர். தம் மையன்புடன் வரவேற்று ஊணுமுடை யுமுதவிப் போற்றிய தமிழர்களுக்கு உள்ளிருந்தேகொல்லும் கொடுநோயாய் இருந்தனர். உண்ட வீட்டுக்கு இரண் டகம் செய்தனர். அக்கொடிய ஆரிய முனிவர்களே தமிழ் நாட்டை ஆரியத் துக்கு அடிபணியச் செய்தனர்; தமிழர் நாகரிகத்தை அழித்தொழித்தனர். தமிழ் இனத்தைச் சிதைத்துச் சின்னா

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 33-ம் நாள் போர்.

சென்னை நவ 16.

இன்று தொடர்ந்து மழையாயிருந் தும் கூட வழக்கம்போல் அய்ந்து தொண்டர்களின் மறியல் 11-15 வரை மறியல் நடந்தது. இவ்வளவு மழை யிலும் பொது மக்கள் தொண்டர் களைத் தொடர்ந்து ஒலி முழக்கம் செய்தனர். போலீசாரும் மக்களைத் தொலைவில்செல்ல வேண்டுமென்கிற பாடத்தை விடவில்லை. நாளைக்கு, பள்ளிகளுக்கு "விஷ்ணு தீபம்" விடு

பின்னப்படுத்தினர்; தனித் தமிழை உருக்குலைத்தனர். தமிழ் நாட்டின் பரப்பைச் சுருக்கினர். 'பிடி சாபம்' என்பதெல்லாம் பிற்காலத் தமிழர்களை ஏய்க்க எழுதி வைத்த பொருளற்ற போலிப் பொய்யுரையே யாகும் எனும் இன்னபல ஆரிய முனிவர் குணஞ் செயலைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்ளவே யாகும். அத்தகைய தமிழ்ப் பகைவர்களான ஆரிய முனிவர் களால் செய்யப்பட்ட ஆரிய நூல்களை உயர்நூலெனக் கொண்டு வாய் விட்டுப் போற்றியும் எழுதியும் வரும் தமிழ் மக்களுக்கு அவ்வாரிய நச்சுநூல்களின் உண்மையை உணர்த்தவேயாகும்.

வாலி ஒரு நாள் ஒரு குகைக்காட்சி யைக்காணச் சென்ற போது அவன் தம்பி சுக்கிரீவன் என்பான் குகை வாயிலை அடைத்துச் சென்று முடி சூட்டிக்கொண்டனன். வாயில் தடை யை அகற்றி நகர் வந்த வாலியைக் கண்டதும் பெண்டு பிள்ளைகளை யெல்லாம் விட்டு சுக்ரீவன் ஒரு மலை யில் சென்று மறைந்து வாழ்ந்து வந் தனன். அவ்வஞ்சகனுக்குதவிய அனு மான் முதலிய கொடியோர்களும் அவ னுடன் சென்று வாழ்ந்து வந்தனர். மனைவியை இழந்த ராமன் அங்கு வந்து தனக்குதவும்படி வேண்டினான். சுக்கிரீவன் தன் அண்ணனைக்கொன்று தன்னை அரசனாக்கினால் உதவுவதா கக் கூறினான். அவ்வாறே ஒரு குற் றமும் செய்யாதவனும், பகைவனல்லா தவனும் ஆன வாலி, சுக்கிரீவனோடு போர் செய்து கொண்டிருக்கும்போது ஒரு மரத்தின் மறைவில் இருந்து அம் பெய்து கொன்ற கொடியனான ராமன் ஒரு போதும் அறம்வளர்த்தோனா கான். அறக்கொடியோனேயாவான். நேர்மையோ, தெய்வத்தன்மையோ இராமனிடம் எள்ளளவாவது இருந் திருக்குமானால் வாலியிடம் சொல்லி இருவரையும் உறவாக்கி வைத்திருப் பான். அவ்வாறு சொல்லியுங்கேட்க வில்லையானால் போர் செய்திருப்பி னும் குற்றமில்லை. மனைவியை இழந்த அவர்கள் "மூக்கரை மூக்கர் முகப்பர் முதுகாட்டில்காக்கையுகக்கும் பிணம்" என்றபடி ஒன்று கூடி ஒரு குற்றமும் செய்யாத வாலியைக்கொன் றது கொடுமையினும் கொடுமை என் பதைத் தமிழ் மக்களுக்கு உணர்த்த வேயாகும்.

பேருருவமெடுக்கவோ, சஞ்சீவிமலை யை எடுக்கவோ, இலங்கையைத் தீக் கிரையாக்கவோ, அசோக வனத்தை யழிக்கவோ அவ்வளவு ஆண்மை யுடையவனல்லன் அனுமன். சாதார ணமானவனேயாவன். தமிழர்களை ஆரியர்க்குக் காட்டிக் கொடுத்த கய வன், கீழ் மகன். மகேந்திர மலையி லிருந்து இலங்கை பாயவேண்டிய வேலை அன்றில்லை. இலங்கைத் தீவுக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையே

இருந்தது. அவ்வாறு பாயக்கூடிய திறனும் அனுமானுக்கில்லை. திருட்டுத்தனமாக இலங்கை சென்று, கடைமகனான விபீடணனைக் கண்டு, அவனுக்கு ஆசை வார்த்தை கூறி, அவன் துணையால் சீதையைக் கண்டு மீளும் போது காவலரால் பிடிபட்டு, இராவணனால் நல்லறிவுறுத்தித் துரத்தப்பட்டான். இவ்வளவே அனுமன் செயல். இதையே கல்வியிற் பெரியவர் கம்பர் அவ்வாறு பெருமைப்படுத்திக் கூறி, காட்டிக்கொடுத்த அக்கடைமகனைத் தமிழ் மக்கள் கோயில் கட்டிக் கும்பிடும் நிலைமைக்குச் செய்துவிட்டனர். கொடியோனான அனுமனின் இரண்டகச் செயலைத் தமிழர்க்கு அறிவுறுத்தி, அக்கீழ் மகன் மீது கொண்டுள்ள அன்பையகற்றி, அக்கயவன் போன்ற காட்டிக் கொடுக்கும் கயவர்களைப் போற்றும் ஏமாற்றத்தைப் போக்கவேயாகும்.

மண்ணாசைப் பெருக்கால், மணிமுடி புனைந்து மன்னவனாக வேண்டுமென்னும் விருப்பால், உளவு வந்த அனுமனோடு சேர்ந்து கொண்டு, நள்ளிரவில் மருந்துக் கிடங்கில் தீயை வைத்து, இலங்கையை விட்டு வெளிச் சென்று, குலப்பகைவனாகிய ஆரிய ராமன் காலில் அடியற்ற மரம் போல் விழுந்து, அண்ணனைக் கொன்று ஆரியரால் ஆழ்வார்ப்பட்டம் பெற்ற இன இரண்டகனாகிய விபீடணனை நல்லவனென்றும், நீதிமானென்றும் நீடு வாழ்வோன் (சிரஞ்சீவி) என்றும் போற்றிப் புகழும் தமிழ் மக்களின் மயக்கவுணர்வைப் போக்கி, அக்கோடரிக் காம்பாகிய கொடியோனாலேதான் தமிழர் ஆரியர்க்கடிமையாகலானது. தமிழ்நாடு சீர்குலைந்தது. தமிழ்ப்பண்பாடு கெட்டது. தமிழர் வாழ்வு வீழ்ந்தது. தமிழர் தாழ்த்தப்பட்டவராயினர். அண்டிப் பிழைக்க வந்த ஆரியர் அதிகாரிகளாயினா. தமிழர் தலைவர்களாயினர்; உயர்மக்களாயினர் என்னும் உண்மையறிவையுண்டாக்கி இழந்த உரிமையைப் பெறுவதற்காகவேயாகும். (தொடரும்)

## இளவஞ்சி.

நாமக்கல்வட்டம் குன்னிப்பாளையம் கே. வி. முத்து அவர்களின் வாழ்க்கைத் துணைவியாருக்குப் பிறந்த பெண்மகவுக்கு இளவஞ்சி எனப் பெயர் சூட்டப் பெற்றதன் நினைவாக அனுப்பிய நன்கொடை ரூ. 1 வரப்பெற்றோம்

## மருத்துவர் சங்கம்

நாகை நவ 13.

இன்று மாலை 3 மணிக்குத் தோழர் பி. முத்துசாமி அவர்கள் தலைமையில், நாகூர் சிவன் தெற்கு வீதி கோ. கோவிந்தசாமி அவர்களின் இல்லத்தில் கூடி ஷை. சங்கம் நிறுவப்பட்டது. தலைவராக நா. புண்ணிய மூர்த்தியும் செயலாளராக சா. துரையும் தேர்ந்

# கோவில்பட்டியில் அறப்போரின் எதிரொலி.

பொது மக்களின் அமைதிக்கு விரோதமாய் நடந்து கொள்கிறார்கள் என்கிற காங்கரஸ் தோழர்களின் புகாரின்மீதும், பப்ளிக் பிராசிக்கியூடரின் எதிர் வாதத்தின் மீதும், வழக்கு முடியும் வரை ஜாமீன் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்ட வழக்கின் விசாரணை, இந்த மாதம் 15-ம் நாள் கோவில்பட்டி சப் கலக்டர் முன்னிலையில் தொடங்கியது.

ஈரோட்டு மாநாட்டின் முடிவுப்படி ஜாமீன் கட்டமறுத்து, குற்றஞ்சாட்டப்பட்ட ஏழு தோழர்களும் பெருமகிழ்ச்சியோடு மக்களின் அன்பைக் கவர்ந்தவர்களாய் சிறை சென்றனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட தோழர்கள் 1. ஈ. வெ. அ. வள்ளிமுத்து [கோவில்பட்டி நகரசபைத் தலைவர்] 2. சி. க. அ. பால்ராசு [நகர திராவிடக்கழகத் தலைவர்] 3. இ. மு. சின்னதுரை [இந்தி எதிர்ப்பு சர்வாதிகாரி] 4. ஏ. ஆர். கே. குருசாமி 5. செ. அருணாசலம் 6. சு. மா. ரத்தினசாமி 7. பொ. தமிழரசன் ஆகியோராவர்

தோழர்கள் சிறைபுகுகின்றார்கள் என்பதையறிந்து பொது மக்கள் மழையைப் பொருட்படுத்தாமல் வந்துகூடி நின்று வாழ்த்தொலியும் அடக்க முறைக்கு எதிர்ப்பொலியும் முழக்கினார்கள் என்றாலும் தலைவர் வள்ளிமுத்து அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மக்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். மறுவிசாரணை இந்த மாதம் 24-ம் நாள்.

## ஈரோட்டில் பிரபலதிருமணம்

ஈரோடு நவ 14.

இன்று காலை 9 மணிக்கு இவ்வூர் பிரபலஸ்தரும் திராவிடர்கழக அனுதாபியும் ரைஸ்மில் சொந்தக்காரருமான தோழர் எம். ஜி. அங்கப்பசெட்டியார் அவர்களின் முதல் மகன் தோழர் கோவிந்தராமிக்கும் புஞ்சைபுளியம்பட்டி தோழியர் நாச்சம்மாளுக்கும், இரண்டாவது மகன் தோழர் நாகப்பனுக்கும் வெள்ளக்கோவில் தோழியர் காந்திமதிக்கும் சிறப்பான முறையில் பார்ப்பனனை ஒழித்து சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. வியாபாரிகளும், அதிகாரிகளும், பிரபலஸ்தர்களும், இயக்கத்தோழர்களும் திரண்டு கூடியிருந்தனர். மணமக்களுக்குப் பல

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 31ம் நாள் போர்.

சென்னை நவ 18.

இன்றும் விடாத மழையிருந்தும் கூட வழக்கம்போல் ஐந்து தொண்டர்களின் மறியல் 10-30 மணிவரை 1 மணி நேரம் நடந்தது. வழக்கம் போலவே போலீசாரும், தொண்டர்களை நெருங்கிச் செல்லாதபடி பொது மக்களைத் தடுத்தனர்.

முதல் பாரத்தில் இந்தி வகுப்புக்கு வரவேண்டிய 200 மாணவர்களில் 27 மாணவர்கள் மட்டுமே இந்தி வகுப்புக்கு வருகின்றனர். பெற்றோர்கள் பலர் பள்ளி அதிகாரிகளுக்குத் தங்கள் பிள்ளைகளுக்கு இந்தி வேண்டியதில்லை என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது. இதனால் விரைவிலேயே போர்க்களத்தை மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

---

திராவிடக்கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் தோழர் குகநாதன் அவர்களும் வெள்ளக்கோவில் திராவிடக்கழகத்தாரும் மணமக்களுக்கு வாழ்த்திதழ் படித்துக் கொடுத்தார்கள்.

## நாகையா—ரத்தினம் திருமணம்.

ஈரோடு நவ 17:

இன்று பிற்பகல் 1-மணிக்கு "ஈரோடு வாசி" ஆசிரியர் தோழர் பி. ஷண்முகவேலாயுதன் தலைமையில், சேலம் வேலூர் தோழர் கருப்பையா குமாரர் தோழர் நாகையாவுக்கும், ஈரோடு தோழர் பத்திரகாளி குமாரத்தி தோழியர் ரத்தினத்திற்கும் ஈரோடு அக்கிரகார வீதியிலுள்ள முனிசிபல் சத்திரத்தில் வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தியும், பாராட்டியும் தோழர்கள் ஈ. ஆர். சின்னப்பா, எஸ். அப்பாவு, ஈ. கே. கருப்பய்யா, ஆர். ரங்கசாமி, என். இ. பாலகுரு ஆகியவர்கள் பேசினார்கள்.

தலைவர் முடிவுரையில் திருமண முறையைப் பாராட்டிப் பேசினார். தோழர் ஈ. கே. கருப்பய்யா நன்றி கூற திருமண விழா முடிவுற்றது.

"குடி அரசு" வளர்ச்சிக்காக மணமக்கள் சார்பாக ரூபாய் ஒன்று அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

## செல்லம்—சிங்கு

பேராவூரணி, நவ. 8.

சங்கமங்கலம் தோழர் சிங்கு அவர்களும் தோழியர் செல்லம் அவர்களும் தோழர் சுப்பிரமணியம் தலைமையில் சீர்திருத்தத் திருமணம்செய்துகொண்டனர். பல தோழர்கள் பேசினார்கள். இதன் நினைவாக அனுப்பிய நன்கொடை ரூ. 1ம் வரப்பெற்றோம்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தனத்தைத் தோண்டிப் பார்க்கும் வேலையில் ஒருவன் ஈடுபட்டால் அருவெறுக்கக்கூடிய சில எலும்புகளின் கல்லறையைத்தானே காணமுடியும்? என் வாழ்க்கை, கேளிக்கைகள் நிறைந்த கலையரங்கல்ல; கோபுரம் எழுப்பப்பட்ட கல்லறை!

புதிதாக மணமான தம்பதிகளுக்கு அவர்கள் 'சந்திப்பு' மறக்கமுடியாத இன்ப இரவாக இருக்கும். ஆனால் எனக்கோ மறக்கமுடியாத துயர இரவாகத்தான் இருந்தது. நாங்கள் சந்தித்த முதல் இரவிலேயே அவருடைய உண்மை சொரூபம் எனக்குத் தெரிந்து விட்டது. அன்றிரவில் அவர் என் உடலைத்தான் வெறுமனே கசக்கினார்; நான் வேதனை அனுபவித்தேன். அவ்வளவுதான்! அதன் பிறகு அவர் தூங்கிக்கொண்டிருந்த காட்சி...? 'கொர்ர், கொர்' ரென்று ஏழு வீடு தாண்டியும் சத்தம் கேட்கும்படி குறட்டை விட்டுக்கொண்டிருக்கும் பொக்கை வாயிலிருந்து கோழை வழிந்தோடுவதும், ஆடைகள் அலங்கோலமாகக் கிடக்க உடல் கூனிக் குறுகி சுருண்டு படுத்திருப்பதும், முகம் வற்றி வதங்கி ஒட்டி-உலர்ந்திருப்பதும்......அம்மம்ம! என்ன கோரம்! இத்தகைய கணவனைப் பெற்ற எந்தப் பெண்தான் வாழ்க்கையில் சுகமும் இன்பமும் பெறமுடியும்? ஒரு இளம் பெண்ணிற்கு வேண்டியது மனத் திருப்தியும் உடலின்பமும் தானே! அதற்கு நான் மட்டும் விதிவிலக்கா? ஒரு நாள்...இருநாளென்றால் பொறுத்துக்கொள்ளலாம். வாழ்நாள் முழுவதுமன்றோ இத்தகைய கணவனுடன் நான் கூடி வாழவேண்டும்! 'அடி, பாவி! அதற்காக ஒரு பெண் தன் கற்பை விலை கூறுவதா?' என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது. சரி! கன்னிப் பெண் ஒருத்தி ஓர் ஆடவனுடன் கூடி விட்டால் 'அய்யோ! அவள் கற்பு அழிந்துவிட்டது' என்று கூச்சலிடுகிறீர்களே! அதே பெண் வேறொரு ஆடவனுக்கு மணமாகித் தன் கணவனுடன் கூடினாள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது மாத்திரம் ஏன் அவளைக் 'கற்புள்ளவள்' என்று நினைக்கிறீர்கள்? அது எப்படியோ போகட்டும்! அதற்காகவும் நான் என் உடலை விலைகூறி விடவில்லை. சமூக அமைப்பும் சூழ்நிலையுமே என்னைத் தாசியாகும்படியான நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கின.

நான் மணமுள்ள மலராகத்தான் இருந்தேன். ஆனால் ஆணவம் கொண்ட ஆண் வர்க்கம் என்னைக் கசக்கிப் பிழிந்து நுகர்வதில்தான் இன்பமும் சுகமும் காணுகிறது. யாராவது கசங்கிய மலரை விரும்புவார்களா? ஆனால் சிந்தனையாளர்கள் விரும்புகிறார்கள், அதிலிருந்து மணமுள்ள பொருட்கள் தயாரிக்க. நான் கசங்கிய மலர்; அன்றலர்ந்த புதிய மலரல்ல! யாராவது மணங்கமழச் செய்ய முன்வருவீர்களா?......

சுந்தரம்! ஆம்; என் காதலன் சுந்தரம்! முன்வந்தான். ஆனால்......

* *

அன்றோர் நாள் மாலை! நான் எங்கள் வீட்டுக் கொல்லைப்புறத்தில் உலாவிக்கொண்டிருந்தேன். என் மனக்குரங்கு இறந்த கால நினைவுக் கிளைகள் ஒவ்வொன்றாகத் தாவிச் சென்றவாறே 'இன்ப வேதனை' அனுபவித்துக்கொண்டிருந்தது. இப்படியே எவ்வளவு நேரந்தான் உலவிக்கொண்டிருந்தேனோ தெரியாது; திடீரென்று "ருக்மணி!" என்ற சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினேன். அதற்குள் நன்றாக இருட்டி நிலவும் பால்போல் காய்ந்து கொண்டிருந்ததை அப்போதுதான் நான் உணர்ந்தேன். உடனே குரல் வந்த திக்கை நோக்கினேன். என்ன ஆச்சரியம்! என் பக்கத்திலுள்ள கம்பிக்கதவருகே சுந்தரம் நின்று கொண்டிருந்தான். எனக்கு அவனைப் பார்க்கவே மனம் வரவில்லை. அப்படியே தலை குனிந்து நின்றேன். அவன் என்னை என்னவெல்லாமோ சொல்லிக்கெஞ்சிஅழைத்தான். நான் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டேன். பின்னும் அவன் என்னை அழாக்குறையாய் வருந்தி அழைத்தான். எனக்கே பரிதாபமாய்ப் போய் விட்டது. அவனருகில் சென்றேன். அவன் எங்கள் காதல் வாழ்வில் நிகழ்ந்த இன்பச்சம்பவங்கள், வாக்குறுதிகள், மனக்கோட்டைகள், கனவுகள் இத்தனையையும் கல்லும் கரையும்படி கூறினான். என் கண்களில் நீர் ததும்பியது. வரப்போகும் இன்பம் என்னைத் தன்னிரு கை நீட்டி அழைப்பதாக எனக்குத் தோன்றியது. நல்ல வேளையாக வீட்டிலும் 'அவர்' இல்லை. உடனே நான் சுந்தரத்துடன் வீட்டை விட்டுக் கிளம்பலானேன். பிறகு என்ன......நானும் அவனும் அர்த்தமற்ற சமூகக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற்ற ஒரு ஜோடி புறாக்கள்!

பின்னர் நாங்கள், நான் இப்போதிருக்கும் இந்த 'பிருந்தா பவனத்'தின் இதே அறைக்கு வந்து சேர்ந்தோம். இங்கு நாங்கள் தங்கிய அத்தனை நாட்களும் இன்ப நாட்கள். பெண்மையின் பயனையடைந்த திருநாட்கள். ஆனால் இன்று—? வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறிமாறித்தான் வரும் என்று கூறுகிறார்களே, அது உண்மைதான் போலும்! நாட்கள் செல்லச் செல்ல எங்கள் கையிலிருந்த கொஞ்சப் பணமும் செலவழிந்து விட்டது. இப்போதுதான் நாளைக்கு என்ன செய்வது என்ற கவலை தோன்ற ஆரம்பித்தது. உடனே சுந்தரத்தை வெளியே போய் ஏதாவது பிழைப்பிற்கு ஒரு வழி தேடி வரும்படி அனுப்பினேன். அவனும் வாடிய முகத்துடன் வெளியே சென்றான். நானும் சற்று ஆறுதலடைந்தேன். ஆனால் அன்று மாலை வரை சுந்தரம் திரும்பிவரவே இல்லை. காலையும் வந்தது! அப்போதுதான் எனக்குச் சிறிது சந்தேகமும் பயமும் தோன்ற ஆரம்பித்தது. என் சந்தேகத்திற்கு முத்தாய்ப்புவைப்பது போல் அன்று காலையிலேயே எனக்கு ஒரு கடிதமும் வந்தது. ஆவலுடன் பிரித்துப் படித்தேன்: 'பிரிய ருக்மணி! நான் உன் குடும்ப வாழ்க்கையினைக் கெடுத்து விட்டதற்காக என்னை நீ மன்னித்து விடு. என் மனம் நிம்மதியடைவதற்கு உன் இன்பம்தான் வேண்டியிருந்தது. அதை நான முழுவதுமாய்ப் பெற்றுவிட்டேன். இனிமேல் நான் இவ்வுலகில் வாழ்ந்தாலும் சரி; இறந்தாலும் சரி. நான் இனிமேல் திரும்பிவரவேமாட்டேன்' இவைகளை வாசித்ததும் அப்படியே இடிந்து உட்கார்ந்து விட்டேன். ஆம்; என் வாழ்க்கையில் தான் இடி விழுந்திருந்தது. பிறகு முட்டினேன்; மோதினேன். பயன்...?

கடைசியில் 'பிருந்தா பவனத்'தின் மேனேஜரே நான் தங்கியிருந்த அறையின் வாடகை வாங்க வந்து விட்டார். அவரிடம் என் நிலையினைக் கூறி முறையிட்டேன். அவர் என்னைக் கணவரிடமாவது பெர்றோரிடமாவது செல்ல உதவியளிப்பதாக வாக்களித்தார். கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்து காதலனுடன் வெளியேறிய நான், இனிமேல் 'அவரிடம்' போக முடியுமா? போனாலும்தான் சேர்த்துக்கொள்வாரா? பெற்றோரிடமாவது செல்லலாமென்றால், என்னைச் சார்ந்த 'விபசாரி' என்ற பழிச்சொல் என் மூன்று தங்கைகளின் வாழ்க்கைகளையுமன்றோ பாதிக்கும்! வெளியில் கூலிககு உழைத்துச் சாப்பிடலாமென்றாலோ, இரவு வேட்டைக்காரர்களின் கண்களுக்கும், அவர்களின் பலத்த போட்டா போட்டியின் துன்பங்களுக்கும் ஓர் பெண் ஆளாக முடியுமா? சுந்தரமோ இனிமேல் என்னிடம் திரும்பி வரமாட்டான்! வேண்டுமானால் என் உயிரை நானே போக்கிக் கொள்ளலாம். வாழ்க்கை வாழ்வதற்கேயன்றி சாவதற்கல்லவே! அதுவும் போக தற்கொலை கோழைத்தனமல்லவா? அப்படியானால் நான் வாழ வழி...? நான் உடனே மேனேஜரின் உதவியை மறுத்துவிட்டு என்னையும் 'பிருந்தா பவனத்'தின் அடிமைப் பெண்களில் ஒருத்தியாகச் சேர்த்துக் கொள்ளும்படி கெஞ்சினேன். அவரும் ஒப்புக்கொண்டார். பிறகு என்ன... நானும்ஒரு தாசி-சமூகத்திற்கோர் விஷநோய்—உள்ளதை உறிஞ்சும் அட்டை

ரோஜா முத்தையா

அழுகிப் புழுத்துக்கொண்டே வரும் சமூகத்துக்கோர் அபாய அறிவிப்பு—காதல் காதல் என்று கருத்திழந்து காளையரை நாடும் காரிகையர்க்கோர் எச்சரிக்கையின் ஸ்தம்பம். மறுபடியும் மறுபடியும் கூறுகிறேன்; நான் தாசியாக மாற விரும்பவில்லை. சமூக அமைப்பும் சூழ் நிலையுமே என்னைத் தாசியாகும்படியான நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கின? கடைசியாகக் கூறுகிறேன்; நீங்கள் விபசார ஒழிப்புச் சட்டங்களால் தாசிகளை ஒழித்துவிட முடியாது. அவர்கள் வாழ விரும்புகிறார்கள்; அவர்களுக்கு நல்லதோர் வாழ்வளியுங்கள். எந்தத் தாசியும் தான் அதே தொழிலைத்தான் செய்வேன் என்று கூறமாட்டாள். தாசிகளை உற்பத்தி செய்யும் இந்த சமூக அமைப்பையே நல்லதோர் முறையில் மாற்றி அமையுங்கள். தாசிகளை அவர்களது நோய் போக்கி மணம் புரிந்து கொள்ளுங்கள். அதற்கு இந்த விஞ்ஞான உலகம் பெனிஸிலினையும் மற்ற வசதிகளையும் அளித்துள்ளது. நானும் தாசியாக இருக்க விரும்பவில்லை. என்னையும் சுத்திகரித்து மணம் செய்துகொள்ள முன்வருவீர்களா? சீர்திருத்தச் செம்மல்களே உங்களைத்தான் கேட்கிறேன்!

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

விமலா: அவனுடைய சம்மதம் என்னவேண்டியிருக்கிறது? என் அப்பாவிடம் சொன்னால், நாளைக்கே மிஸ்டர் ராஜ் 'மில்லா பீஸில்' வேலை பார்த்துக்கொண்டிருப்பார்!

இராஜன்:- ஆமாங்! என்னைப் பற்றி இவ்வளவு அக்கரையாகக் கேட்கிறாயே! நீ என்ன செய்யப் போகிறாய் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே...?

வேவா:- நான்தானே! துப்பறியும் உத்தியோகத்திற்கு மனுப் போட்டு வைத்திருக்கிறேன்...

விமலா:— ஆகா...! வந்தது மோசம்...இனி, ஆகாது இவர் சகவாசம்!!

வேவா:— ஏன்...?

இராஜன்:— ஒன்றுமில்லை! நீ துப்பறியும் உத்தியோகஸ்தனாக வந்ததும் எங்கே எங்கள் காதல் உளவுகளை எல்லாம் அம்பலப் படுத்திவிடப் போகிறாயோ...! என்று விமலா பயந்து விட்டாள்.

வேவா:— ஓகோ! அப்படியானால், பயப்படவேண்டியதில்லை! எனக்குத் துப்பறியும் உத்தியோகம் கிடைப்பதற்குள்ளாக, உங்கள் காதலால் விளைந்த கலியாணத்தை முடித்துக்கொண்டு எனக்கும் ஒரு நல்ல விருந்தளித்து விட்டால், இவைகளை எல்லாம் மறந்து விடுகிறேன் அவ்வளவு தானே!

விமலா:- [கலகலெனச் சிரிக்கிறாள்.]

இராஜன்:- என்ன விமலா! ஏன் சிரிக்கிறாய்?

விமலா:- மிஸ்டர் வேவா சொல்வதைக் கேட்டதும் எனக்கு 'வள்ளிதிருமணம்' ஞாபகத்திற்கு வந்து விட்டது!

வேவா:- எப்படி...?

விமலா:- மிஸ்டர் வேவா! நீரே விநாயகர்! உமக்கு வரப்போகிற துப்பறியும் உத்தியோகம் இருக்கிறதே அதுதான் யானை!! நம்முடைய கல்லூரியே நாரதர்!!! மிஸ்டர் ராஜன் சுப்பிரமணியர்! நான் தான் ஸ்ரீ வள்ளிநாயகி!! எப்படி...?

வேவா:- ஆகா...! வெகு பொருத்தம், வெகு பொருத்தம்...

மூவரும்:- [சிரித்துக்கொண்டே செல்கின்றனர்.]

## காட்சி 2.

[சிதம்பர முதலியார் வீடு]

உறுப்பினர்:- சிதம்பர முதலியார், சின்னான், பத்மா.

கதை அமைப்பு:- [முதலியாரின் இரண்டாவது தாரமாகிய பத்மா, முதல் தாரத்திற்குப் பிறந்த மகள் விமலாவைத் தன் தம்பி விஸ்வனுக்கே கலியாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று முதலியாரை வற்புறுத்துகிறாள்]

முதலியார்:- அடேய்ச் சின்னான்! டேய்...சின்னான்...!!

சின்னான்:- எசமான்...

முதலியார்:- இப்படி வாடா...! அம்மா உள்ளே என்னடா பண்ணுறாள்...?

சின்னான்:- அது கிடக்குதுங்க, ஒரு மூலையிலே கழுதையாட்டம்.

முதலியார்:- [படபடப்புடன்] அடடே...! யாரையடா கழுதை என்கிறே...?

சின்னான்:- [பயத்துடன்] யேன் அம்மாளைத்தானே கேட்டீங்க எசமான்...?

முதலியார்:- அட முட்டாப் பயலே! உன் அம்மாளைப்பற்றி நான் ஏண்டா கேட்கப்போகிறேன்?

சின்னான்:- ஆமாங்க! எங்கம்மா ரொம்ப ஏழை; எசமான்! அவளைப்பத்தி எல்லாம் கேப்பீங்களா...?

முதலியார்:- என்னடாது! ஏழையா இருந்தாலென்ன நான் விசாரிக்க மாட்டேனா...?

சின்னான்:- அப்படித்தானுங்களே சொல்லிக்கிறாங்க!

முதலியார்:- என்னடா டேய்! எந்த மடப்பயடா என்னைப்பற்றி அப்படிச் சொன்னான்? இந்த ஊரிலேயே பரோபகாரச் சிதம்பர முதலியாருன்னு கேட்டால்தானேடா என்னை யாருக்குந் தெரியும்...?

சின்னான்:- சொன்னவங்க ஒன்னும் மடப்பயலில்லீங்க எசமான்! பெரிய பெரிய மனுசனுங்களே தானுங்க!

முதலியார்:- யாருடா? எப்படிடா?

சின்னான்:- அதுவுங்களா? ஏழைகளுக்குக் கடவுள்தான் உதவணுமாம் ... பணக்காரர்களுக்குத் தான் பணக்காரங்க உதவுவாங்களாமே...?

முதலியார்:- ஓகோ! அதைச் சொல்கிறாயா...? அதெல்லாம் வேதாந்த வியாபாரரகசியண்டா...! உன்னைப் போன்ற சின்னான்களின் சின்ன மூளைக்கெல்லாம் எட்டாது! உம். சரிதான் போடா! போயி அம்மாளைக் கூட்டிக் கொண்டு வாடா.

சின்னான்:- வேறே யாருங்க எங்கம்மா...?

முதலியார்:- அட முட்டாளே! அம்மாள் என்றால், உன் எசமானி அம்மாள்னு அருத்தம்; தெரிகிறதா?

சின்னான்:- ஓ......! நம்ம எசமானி அம்மாளைச் சொல்றீங்களா?

முதலியார்:- அது என்னடா நம்ம எசமானி? நம்ம எசமானியாம்ல, நம்ம எசமானி? ஏண்டா டேய்! அவதான் எனக்கும் எசமானியா...?

பத்மா:- [வரும்போதே] ஓகோ! உங்களுக்கு வேறே எசமானி வாய்த்திருக்காளா! சரி. அப்படீன்னா என்கூடப் பேச வேண்டியதில்லை போங்க...

முதலியார்:- அடடா...! இதுக்ெல்லாம் இப்படிக் கோவித்துக் கொள்ளலாமா...?—ஏண்டா சின்னான்! உன்னிடம் பத்மா எசமானியைக் கூட்டிக்கொண்டு வாடா என்று தானே சொன்னேன்...?

சின்னான்:- ஆமாங்க எசமான்! அதனாலேதானே நானும் "நம்ம எசமானீன்னு" அது என்னமோ 'இருமை'ன்பாங்களே அதுலே சொன்னே...

முதலியார்:- சரித்தான் போடா

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

போ எருமை!

பத்மா:- நான் உங்களிடம் ஒரு காரியமாகத்தான் வந்தேன்.

முதலியார்:- இல்லையினா வரப் போகிறியா...! உம். நானும் உன்னை ஒரு காரியமாகத்தான் கூப்பிடச் சொல்லிக் கொண்டிருந்தேன்...

பத்மா:- என்னகாரியமோ அது?

முதலியார்:- விமலாவின் கலியாண விஷயமாகத்தான்...

பத்மா:- அட! அதுவேதான் என்னுடைய காரியமும்...

முதலியார்:- அடடே...! பரவா இல்லையே! ரெண்டுபேருடைய மனதும் ஒன்னு சொன்னாப் போ லிருக்கிறதே...

பத்மா: ஒரு நல்ல காரியத்துக்கு அப்படித்தான் உதிக்கும்னு பெரியவுங்க சொல்லுவாங்க!

முதலியார்:-பெரியவுங்க எதைத் தான் சொல்லாமே விட்டாங்க? சரி...விமலா எங்கே...?

பத்மா:- அவள் பரிட்சையின் முடிவைத் தெரிஞ்சுக்கிட்டு வாரேன்னு வெளியே போனாள் இன்னும்வரக்காணோம்! ஆமாங்..! விமலாவை யாருக்குக் கொடுப்பதாக உத்தேசம்?

முதலியார்:- என்னடியது......! கொடுக்கிறதாவது வாங்கிறதாவது? விமலா என்ன பொம்மையோ...? விமலா வயது வந்தவள்? விவரந் தெரிந்தவள்!! கல்வி அறிவுடைய கல்லூரி மாணவி!!! அவள் யாரை விரும்புகிறாளோ அந்தப் பிள்ளையாண்டானும் அவளை விரும்பினால் கலியாணச் சடங்கை நாம் ஒரு கருவியைப் போல் இருந்து நடத்த வேண்டியதுதானே...

பத்மா:- ஆங் ஆங்......! என்னனென...!! அவ்வளவுக்காயிப் போச்சா...? விமலாதான் ஏதோ துடுக்குத்தனமாக் கன்னாபின்னானு உளறுகிறாளென்றால், நீங்களும் அவளுக்கப்பனாயிடுவீங்க போலிருக்கே?

முதலியார்:- என்னடி சொல்றே...? விமலாவுக்கு நான் அப்பனில்லையா...? வேறே யாருடி அவளுக்கு அப்பன்...?

பத்மா:- அட எழவே...! ஒரு பேச்சுக்குச் சொன்னா....அதைக் கூடப் பிடிச்சுக்கிர்றீங்களே......? நூக்கும்! போங்கன்னா...

முதலியார்:- இந்தா...எங் கண்ணல்ல...!

பத்மா:- நூ...கூம்...நான் மாட்டேன்...

முதலியார்:- இப்படிக் கொஞ்சம் பாரேன்...

பத்மா:- நீங்க வேண்டாம் போங்க...

முதலியார்:- இந்தா...நீ என்ன சொல்றியோ...அப்படியே செய்றேண்டி எங்கண்ணே கோவிச்சுக்காதே...

பத்மா:- நான் மாட்டேன்...... நூம்...!

முதலியார்:- அடியே உன் கண்ணாடிக் கண்ணத்தைக் கொஞ்சம் காட்டுடீன்னா...

பத்மா:- தொடாதீங்க! நீங்க ஏமாத்திடுவீங்க...

முதலியார்:- ஏமாத்த மாட்டேண்டி! சத்தியமா, நீ சொல்றபடி எல்லாங் கேட்கிறேண்டியினா...?

பத்மா:- அப்படியினா! நீங்க சத்தியம் பண்ணுறீங்களா?

முதலியார்:- இப்போ பண்ணுனது என்னவாம்?

பத்மா:- அப்படி இல்லே...

முதலியார்:-வேறே எப்படியாம்?

பத்மா:- 'சத்தியமாக விமலாவை விஸ்வனுக்கே கலியாணம் செய்து கொடுக்கிறேன்' என்று சொன்னாத்தான்!

முதலியார்:- அடியே! அந்தச் சத்தியத்தை விமலாவிடமிருந்தல்லவா, வாங்கவேண்டும்? நானா உன் தம்பியைக் கட்டிக்கிறப் போறேன்...?

பத்மா:- அவள் என்ன சத்தியம் பண்ணுறது? நம்முடைய சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவள் தானே அவள்? விமலா என்ன அவ்வளவு ஒஸத்தி! சாட்சாத் ஸ்ரீ ராமபிரானே, தசரதச் சக்ரவர்த்தி அவருடைய இளையாளுக்குக் கொடுத்த சத்தியத்துக்குக் கட்டுப்பட்டுத்தானே காட்டுக்குப் போனார்...?

முதலியார்:- அடியே! அதெல்லாம் அந்தக் காலத்திலே இராமாயணக் கதை நடக்கணும்னு அப்படி எழுதி வைச்சிருக்காங்கடின்னா...!

பத்மா:- இந்தக் காலத்திலே! அதுவும் இங்கே, நம்ம ராமாயணம் நடக்கணும்னா நீங்க சத்தியம் செய்யத்தான் வேணும், உங்க மகள் விமலா அதன்படி நடக்கத்தான் வேணும்! இல்லையினா...நூகூம்...

முதலியார்:- வேண்டாண்டி வேண்டாண்டி கண்ணே! உன் கோவம் வேண்டாண்டி!! சத்தியமே பண்ணிவிடுறேன்!!!

★

[2ம் பக்கத் தொடர்ச்சி]

வாம்'' என்றான் மாபலி. ''அப்படியானால் என்னோடு வாரும்'' என்று வாமனன், மாபலியை ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான். ஊர் மக்களெல்லாம் அந்த அறைக்கு வெளியே மன்னனின் கொடைத் திறனைப்போற்றிக் கொண்டிருந்தனர். ''உமது மூன்றாவது அடியை அளந்து கொள்ளும்'' என்றான் மாபலி. ''அரசே! உமது தலையில் காலைவைத்துத் தான் மூன்றாவது அடியை அளக்க வேண்டும்; அதற்கும் நீர்சித்தமாக இருக்கவேண்டும். அப்படியிருந்தீரேயானால் உம்மைப் பாதாள சொர்க்கத்திற்கு அனுப்பிவைக்கிறேன்'' என்றான் வாமனன்.

மாபலி மன்னவன் சிரித்துக் கொண்டே ''உம்முடைய அதள-விதள-பாதள'த்தை உம்மோடு வைத்துக் கொள்ளும்; முதலில், உமது கோரிக்கையைப் பூர்த்தி செய்து கொள்ளும்.'' என்றான். ''சரி; உட்காரும்'' என்றான் வாமனன். யாருக்கும் என்றுமே தலை வணங்காத மாபலி மன்னன் ஆரியர்களின் சூழ்ச்சிக்கு அன்று தலை வணங்கினான். மாபலி மன்னன் உட்கார்ந்ததும் வாமனன் தமது காலைத் தூக்கி மாபலியின் தலைமேல் வைத்தான். உடனே மாபலி மன்னவன் அடியில் போய் விழுந்தான்.

விஷயம் என்ன தெரியுமா? 'மாபலி இருக்கும் வரை நாம் வாழ முடியாது' என்றுகண்ட ஆரியர்கள் முன் ஏற்பாட்டின்படி அந்த அறையில் ஒரு பெரியபள்ளம் தோண்டி, மேலே ஒரு பலகையைப் போட்டு மூடி விட்டார்கள். வாமனன், மாபலியின் தலைமேல் காலைத் தூக்கி வைத்ததும் 'டபக்'கென்று பலகையை இழுத்து விட்டார்கள். மாபலி அடியில் விழுந்து விட்டான்.

வாமனன், மாபலியின் தலையை அளந்து விட்டு வெளியே வந்ததும் ஊர்மக்களெல்லாம் ''அரசன் எங்கே?'' என்று கேட்டனர். மாபலியின் கொடைத்திறனை மெச்சி, அவனைப்பாதாள சொர்க்கத்திற்கு அனுப்பி விட்டோம்'' என்றான் வாமனன். இதைக் கேட்ட மக்கள் ஆத்திரம் அடைவார்கள் என்று எண்ணித்தான் வாமனனைக் 'கடவுள் அவதாரம்' என்று பூஜை செய்தது. இந்தக் கதையைத்தான் சிலர் 'வாமனாவதாரம்' என்று கதைக்கிறார்கள்.

## பெரியார் ஈ. வெ. ரா. விழா!

கிள்ளான் அக் 15.

நாளது 1979-ம் (திருவள்ளுவர்) ஆண்டு புரட்டாசி 30-ம் நாள் (ஆங்கிலம். 15—10—48) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-மணிக்கு புக்கிட்ராசா 2½-மைல் லட்சுமி தோட்டத்தில், உயர் திரு சி. பெ. திருவேங்கிடம் அவர்கள் தலைமையில், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 70-ம் ஆண்டு விழா ஷை தோட்டத்தின் பொது மக்களால் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது.

திரு வே. காளிமுத்து அவர்கள், பெரியார் அவர்களின், பொது வாழ்வை வெகு அழகாகக் கூறி புரட்சிக் கவிஞரின் வாழ்த்துப்பாவுடன், பெரியார் படத்தை கீண்ட கைதட்டுதலுக் கிடையே திறந்துவைத்தார்.

பின்னர், திருவாளர்கள்:— சி. கெங்காதரன், இராம முத்து, பி. அ. முனியாண்டி (காப்பார்) ஆகியோர்பெரியாரின் வாழ்க்கையைப்பற்றி தெளிவாகவும், விளக்கமாகவும் பேசிய பின்னர், கூட்டம் 6½-மணிக்கு செயலாளர் நன்றி கூற இனிது முடிவெய்தியது.

**நிறைவேறிய தீர்மானங்கள்.**

(1) பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, திராவிட மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமாக இக்கூட்டத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(2) தமிழ் நாட்டின் இன்றைய அரசியலாளர்கள் இந்தியைப் பள்ளிச் சிறார்களுக்குக் கட்டாயப் பாடமாக வைத்துள்ளதை வன்மையாகக் கண்டிப்பதுடன், பெரியார் தலைமையில் நடைபெற்று வரும் இந்தி எதிர்ப்புக்கு முழு ஆதரவை அளிப்பதுடன், தமிழ் நாட்டில் தமிழ் மொழியை அரசியல் மொழியாகவும், பள்ளிகளில் கட்டாயப்பாடமாகவும் வைக்க வேண்டுமாக இக்கூட்டத்தின் சார்பில் சென்னை அரசியலாளரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

### சீர்திருத்த திருமணம்.

மு. தா. செங்காட்டுப்பட்டி நவ 15.

நேற்று காலை 10-மணிக்கு துறையூர் வழக்கறிஞர் தோழர் பி. ரெங்கசாமியவர்கள் தலைமையில் துலையானத்தம் தோழியர் ராதா அம்மையும் செங்காட்டுப்பட்டி தோழர் கிருஷ்ணசாமியும் செய்து கொண்ட சீர்திருத்தத் திருமணத்தில் பல தோழர்கள் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இதன் நினைவாக அனுப்பிய நன்கொடை ரூ. 1 ம் வரப்பெற்றோம்.

## இந்தி எதிர்ப்பு ஊர்வலமும் பொதுக்கூட்டமும்.

கரூர் நவ 16.

இந்தி எதிர்ப்புக் கமிட்டியாரால் தோழர் முகமதுமீரா தலைமையில் காமாட்சியம்மன் கோவில் தெருவிலிருந்து பல தாய்மார்கள் கொடி ஏந்தி முன்செல்ல நூற்றுக்கணக்கான கருஞ்சட்டையினர் பின்னால் "இந்தி ஒழிக" "தமிழ் வாழ்க" என்று முழக்கமிட்டுக் கொண்டு பெரிய கடைவீதி வழியாக வந்து கரூர் புகை வண்டி நிலையம், அமராவதி ஆற்றங்கரையில் திருவாட்டி சின்னத்தாயாரம்மாள் அவர்கள் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. அது சமயம் கட்டாய இந்தியைக் கண்டித்து தோழர்களான கே. ராமசாமி, கரிகாலன், கே. பாலையா ஆகியோரும் மாணவத்தோழர்களான முத்துசாமி, சின்னுசாமி (10-வயது) குருநாதன் (10-வயது) ராமலிங்கம் முத்து ஆகியோரும் கட்டாய இந்தியைக் கண்டித்து மிக விளக்கமாகப்பேசினார்கள். கூட்டமுடிவில் தோழியர் சண்முகவடிவு அம்மையார் திருவாளர் வெள்ளியங்கிரிக்கவுண்டர் அவர்களின் அகால மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் செய்யப்பட்டது. கரூர் இந்தி எதிர்ப்புக்கமிட்டியாருக்கு மாங்காச்சோளிபாளையம் தோழர் முத்துசாமி அவர்களால் ரூபாய் 5 நன்கொடை அளித்தபின் கூட்டம் இரவு 10-மணிக்கு இனிது முடிந்தது.

## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்மராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE